# இனவழிப் பிரிவினையை அணுகுகிருர்

# ஆச்சாரியார்?

## மொழி—மத வழிப் பிரவினையைச் சாடும் "அந்தரங்கம்"

## நல்லுறவும் நல்லாட்சியும் நாடினல் திராவிடப் பிரிவினைக்கு வழிகோலட்டும்

### ஆச்சாரியார் பேச்சுப் பற்றி ஆய்வுரை

மத நம்பிக்கையின் காரணமாக ஏற்பட்ட பிரிவினையால் எவ்வளவோ அனர்த்தங்கள் விளைந்தன. அவற்றை நீங்கள் அறிவீர்கள். பாஷாவாரி அடிப்படைமீது நாடு பிரிந்தாலும் பல சங்கடங்கள் தோன்றும்.

பல ஆண்டுகளுக்குமுன் பிரசார வேலைக்காக இத்தேசத்தைப் பிரித்தோம். ஆனல் பிரசாரம் வேறு; நிர்வாகம் வேறு இருந்தாலும் சாத்தியமான அளவுக்கு நியாயம் வழங்குவோம்.

இவை கவர்னர் ஜனரல் தோழர் இராஜகோபாலாச்சாரியார் அவர்கள் அண்மையில் பூரியில் ஒரு கூட்டத்தில் பேசும்போது வெளியிட்ட கருத்துக்கள்.

பாக்கிஸ்தான் பிரிவினைப் பிரச்சினை எழுந்த காலத்திலிருந்து, ஆச்சாரியார் பிரிவினைத் தத்துவத்துக்கு விளக்கம் தரும் பெரும் பணியில் ஈடுபட்டிருக்கிருர். அவரைப்போல் பிரிவினையை எதிர்த்துப் பேசியவர்களும் கிடையாது, ஆதரித்துப் பேசியவர்களும் கிடையாது. தோழர் ஜின்னு பாகிஸ்தான் பிரிய வேண்டும் என்று சொன்னதுதான் தாமதம், அதற்கு எதிர்ப்பு முன்னணி அமைப்பது எங்ஙனம் என்று, கச்சைவரிந்துகட்டி நின்றவர்களில் ஆச்சாரியார் முதன்மையானவர் என்லாம். பிரிவினைக்கு எதிராக எதைச் சொன்னல் மக்களுக்கு முஸ்லீம் லீகிடம் வெறுப்பு உண்டாகும் என்றெண்ணி, அத்தகைய குட்டிக் கதைகளும், பழமொழிகளும் எடுத்தியம்பியவர் அவரே. நாட்டைப்பிரிப்பது கூடாது என்பதை மக்களுக்கு விளக்க, தாயைவெட்டலாமா, பசுவை வெட்டலாமா என்றெல்லாம் உவமைகாட்டிப் பேசினர்.

பின்னர், பிரிவினைப்பிரச்சினை வலுப்பெற ஆரம்பித்ததும், குடும்பத்தில் பாகப்பிரிவினை எப்படி அவசியமோ, அதுபோல, பிரிவினை அவசியமென்ற கருத்துப்படப் பேச ஆரம்பித்தார். "துணி கிழிய ஆரம்பித்தால், அதனைத் தைத்து உடுத்துவது தகுதியல்ல இரு துண்டுகளாக்கி விடுதலே சாலச்சிறந்தது" என்று உவமை காட்டி பாகிஸ்தானுக்கு வக்காலத்து வாங்கிப் பேசினர். இதனல், தனக்கு ஏற்பட்ட எதிர்ப்புகளை யெல்லாம் சாமர்த்தியமாகச் சமாளித்தார். இதனை 'கல்கி'கள் "சபாஷ்" போட்டு வரவேற்றன.

அதே போல், இந்நாட்டில் பாஷாவாரி மாகாணங்கள் பிரிய வேண்டிய அவசியத்தை வற்புறுத்தியவரும் அவரே. ஆனல் அப்படிப்பட்ட முதறிஞர்தான் இன்று பேசுகிருர், மத அடிப்படையில் நாடு பிரிவதாலும் சங்கடமே என்று. இதுதான் ஆச்சாரியாரின் திறமைக்கு எடுத்துக்காட்டு போலும்!

மத அடிப்படையில் நாடு பிரிவதும் கூடாது. மொழி அடிப்படையில் பிரிவதும் கூடாது என்ற முடிவுக்கு வந்து விட்டார் ஆச்சாரியார்! இனி எஞ்சி நிற்பது இன அடிப்படையில் நாடு பிரியும் கொள்கை ஒன்றுதான். அதாவது, திராவிட நாட்டுப் பிரிவினைக்கொள்கையை ஆதரிப்பதே யாகும்.

அன்று 'தமிழ் நாடு தமிழருக்கே' என்று நாம் நமது இலட்சிய ஒலியை எழுப்பிய போது 'எலிவளை எலிகளுக்கே' என்று நம்மை நையாண்டி செய்து பின்னர் நாம் 'திராவிட நாடு திராவிடருக்கே' என்ற பெரு நோக்கோடும், உருப்படியான எண்ணத்தோடும் முன்னேறிய காலையில் "திராவிடமாவது—ஆரியமாவது; இது நடக்கிற காரியமா, "ஆந்திரரும், கேரளரும் இதனை ஏற்பரா; என்றெல்லாம் அலட்சியம், அகம்பாவம், குறும்புத்தனம் ஆகிய அனைத்தும் கலந்த வர்தானியிலே பேசி வந்தக கூட்டத்தின் தலைவரனக் கருதப்படும், தோழர் ஆச்சாரியார் இன்று இப்படிப் பேசுகிருர் என்று நாம் ஐயப்படும்படி "மத அடிப்படையில பிரிவினை ஏற்படுவதும், மொழி அடிப்படையில் பிரிவினை ஏற்படுவதும் தொல்லை தருவன" என்று பேசுவதன் மூலம், இன அடிப்படையில் நாடு பிரிவதை மறைமுகமாக ஒப்புக்கொள்ளுகிருர் ஆச்சாரியார் என்ருல், இதனை திராவிட இயக்கத்தின் வெற்றி யென்றே சொல்லவேண்டும்.

ஓரளவுக்கு ஆச்சாரியார் வழிக்கு வந்துவிட்டார். அவரைத் தொடர்ந்து மற்றவர்களும் வந்து, இவவிந்திய உபகண்டம் மொழிவழி பிரிந்து, இனவழி இணைய வழிகோலுவார்களா?

மேலும் ஆச்சாரியார் பேச்சையில் 'பல வருஷங்களுக்கு முன் பிரசார வேலைகளுக்காக

[தொடர்ச்சி 6-ம் பக்கம் பார்க்க]

Phone No. 4502 விலை அணு ஒன்று]

Regd. No. M. 5458 [இலங்கை 10 சதம்]

# மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணதுரை M.A. MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (5—12—49) வெளியீடு (6—12—49) [இதழ் 108

# சீனுவில் கம்யூனிஸம் தோற்றமும் கட்சி வளர்ச்சியும்

## ஜனநாயக சமதர்மக் கட்சித் தலைவர் விளக்கம்

### தேசிய சர்க்கார் தலையெடுக்க முடியுமா?

சமதர்மக் கட்சியின் தலைவர் டாக்டர் கார்ஸன் சியாங் டிச. 3-ந் தேதி மாலை சென்னைப் பல்கலைக் கழகக் கட்டிடத்தில், 'சீனுவில் அரசியல் கட்சிகள் வளர்ச்சி பற்றிப் பேசுகையில் பற்பல கருத்துக்களை வெளியிட்டார்.

அவர் சொன்னர்: இந்நூற்றுண்டு துவக்கத்தில் ஜப்பானிடம் சீனு தோல்வியுற்றதும், சீன மக்கள் சீர்திருத்தப்பணிகளை மேற்கொள்ளுவராயினர்; தலைவர்களும் சீனவைக் காத்துக்கொள்வதற்கான வழி வகைகளை வகுக்கலாயினர். இந்தக் காலத்தில்தான், சீனுவில் ரஷ்யாவின் செல்வாக்கு அதிகரிக்கலாயிற்று; சீன அரசியலில் கம்யூனிஸ்டும் முக்கியத்துவம் பெறலாயிற்று.

கடந்த போர்க்காலத்தில், நாட்டில், சிறப்பாக மஞ்சூரியாவில் தங்கள் நிலையைக்கம்யூனிஸ்ட்கள் பலப்படுத்திக்கொள்வாராயினர். கம்யூனிஸ்ட் இயக்கம் நாளுக்குநாள் வலுப்பெற்று, உரம்பெற்று வந்து கொண்டேயிருந்தது.

இடைப்பட்ட சீரமைப்புகாலத்தில் நானும், எனது கட்சியினரும் நாட்டினதுக்குமான அரசியலொன்று வகுக்க, வெகு பாடுபட்டோம்; ஆனல் அம்முயற்சி வியர்த்தமாயிற்று.

சீனுவின் எதிர் காலத்தைப்பற்றி இப்போதெதுவும் கூறுவதற்கில்லை. சீனுவில் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் கொள்கை யென்ன வென்பதை அதன் தலைவர் வரையறுத்துக் கூறிவிட்டார். கம்யூனிஸ்ட்களின அயல் நாட்டுக் கொள்கையை—அதாவது எதிர்காலத்தில் போரேதுவும் நேரிட்டால், ரஷ்யாவுடன் நேசஉறவு வைத்துக் கொள்வதை—சீன மக்கள் மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்வார்களென நான் நினைக்கவில்லை. நாட்டில தேசீய சர்க்காரின் நிலை மிக மிக மோசமானதேயாகும். இது அப்போதே. இப்போது என்ன நிலை என்பது என்னல் தெரிந்து கொள்ள முடியவில்லை; காரணம், பலகாலமாகவே நான் இந்தியாவில் இருந்து வருகிறேன்"

கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய டாக்டர் எம். பி மகாதேவன், புதிய ஆசிய அமைப்பில், எதிர் காலத்தில் இந்தியாவுக்கும் சீனுவுக்குமிடையே நல்லதொரு தொடர்பு பெருத்த அளவிலிருக்க வேண்டுமென வலி...

### கோள்முதலில் வீழ்ச்சி!

நவம்பர் 26-ந்தேதியோடு முடிவடையும் வாரத்தில் சென்னை மாகாணத்தில் உணவு தானியக் கொள்முதல் 9,868 டன். என்று அறிவிக்கப்படுகிறது. இதற்குமுந்திய வாரத்தில், 13,384 டன் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது.

### "நல்லதுதான்; ஆனல் பொறுங்கள்"!

கோசா மாகாணமென்பதாக ஏன்று நிறுவுவது எளிதுதான், விரும்பத்தக்கதுதான், அப்படியொன்று ஏற்படப்போவதிலும் உறுதிதான். ஆனல் பொறுத்தே செய்வோம். இப்போது எம் கவனத்தை இதுகலருதல் கூடாது' என்று பிரதம மந்திரி பண்டித நேரு, தன்னை வந்து கண்ட ஐக்கிய கோசாத் தூதுக் குழுவினரிடம் டிசம்பர் 3-ந் தேதி குறிப்பிட்டாராம்.

## 'சீனுவில் அரசியல் மாற்றம் இந்தியாவுக்கு ஆபத்தாயிற்று'!

———:0———

### திபேத்தில் தீவிர விளைவுகள் கண்டு அஸ்ஸாம் பிரதமர் கலக்கம்

"சீனுவில் ஏற்பட்டிருக்கும் அரசியல் மாற்றமும், திபேத்திலும் பர்மாவிலும் நேரிட்டிருக்கும் அதன் அதிதீவிர விளைவுகளும் நம் நாட்டிற்கு, சிறப்பாக அஸ்ஸாமுக்கு பேராபத்தை விளைவிக்கவல்லனவாகத் திகழ்கின்றன" என்று, அஸ்ஸாம் பிரதமர் தோழர் கோபிநாத் பர்தோலி, டிசம்பர் 2-ந் தேதி மாலை சமட்டா என்ற இடத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

சீனு, திபெத், பர்மா ஆகிய இடங்களிலுள்ள நிலைமைகளை அனுசரித்து, நாட்டின் உள்நாட்டுப் பாதுகாப்பைப் பலப்படுத்த வேண்டியது மிக மிக அவசியமாகிறது. இதனை மக்கள் உணராவிடில், இந்நாடு குழப்பம், குளறுபடிக்கெல்லாம் உள்ளாகப்போவது உறுதியென்று, அவர் மேலும் தெரிவித்தார்.

## நீதிபதிகளின் வேலை எளிதாக்கப்படுகிறது!

———(0)———

### கொலைக் குற்றவாளியைக் காட்டிக்கொடுக்கும் அதிசயக் கருவி!

லண்டன், டிச. 4—

கொலைக்குற்றம் சாட்டப்பட்ட ஒருவர், உண்மையில் அக்குற்றத்தை செய்தவர்தான என்பதை அறிய, ஒரு நூதன இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதென 'குளோப்' செய்தி நிலையம் கூறுகிறது.

எதிரிகளின் மன நிலைமையை அறிந்தே இது உண்மையை வெளிப்படுத்திவிடுகிறதாம், இதன் பெயர், எலெக்ட்ரோ என்ஸெலாகிராய் என்பதாம். இதுவரை இந்த இயந்திரம் 64 கொலைக்குற்றக் கைதிகள் விஷயத்தில் பரீட்சிக்கப்பட்டிருக்கிறது.

இந்த இயந்திரம் கொலைகளைப் பற்றி உண்மையைக் கண்டு பிடிப்பதுடன் மட்டுமின்றி ஆத்திர மூட்டினல் கொலை செய்துவிடக் கூடியவர்கள் யார் என்பதைக்கூட அறிவித்து விடும் சக்தி கொண்டிருக்கிறதாம்.

இனி, கொலை வழக்குகளில் உண்மையை அறிய, இந்த இயந்திரம் தாராளமாக உபயோகிக்கப்பட வேண்டும் என்று, விஞ்ஞானிகள் வற்புறுத்துகிருர்கள்.

மாலை மணி

சென்னை 5—12—49 திங்கட்கிழமை

# நிபந்தனையற்ற சரணே நேரிய வழி!

சுங்கிங் வீழ்ச்சிக்குப் பின்னர், சீனாவின் தேசீய சர்க்கார் அங்குமிங்கு மலைந்து அவதிப்படுவதைக் காட்டிலும், கொஞ்சம் தொலைவாகப் போய் விடுவோமென்ற திட்டத்தில், பார்மோஸாத் தீவில் அடைக்கலம் புகுந்துவிட்டது. சுங்கிங் வீழ்ச்சியே சியாங் சர்க்காரின் தலையெடுக்க முடியாத வீழ்ச்சியைத்தான் சித்தரிப்பதொன்ருகுமென்றும், தேசீயக் கட்சியினரின் வீராப்பும், பேராசையும் இன்னும் மண்ணோடு மண்ணாய்த் தகரவில்லை யென்பதை யெடுத்துக் காட்டுவதேயாகும், அவர்களின் 'கூடுவிட்டுக் கூடு பாயும்' முறை, பாதுகாப்பான இடமென்று கருதி பார்மோஸாவை நாடினரே, அதுவாவது அவர்களுக்கு 'அபயம்' அளிக்கக்கூடியது தானாவென்பது ஐயப்பாடே. அமெரிக்காவுக்குச் சீனக் கம்யூனிஸ்டுகள் மீது நேரடியான ஆத்திரம் வந்து, அதன் பேரில் அதனுடைய நேரடி நடவடிக்கை கம்யூனிஸ்டுகள் மேல் பாயும் வகையில், சியாங் கட்சியினர் தந்திர வேலைகளிலீடுபட்டு வருவதை, அவர்களின் போர்ப் பாதையை நுணுக்கமாய் ஆய்ந்து வருவோர் நன்குணர்வர். இப்போது, அவர்கள் பார்மோஸா தீவுக்குப் பாய்ந்திருப்பதின் உள்ளெண்ணமே இதுதானென்று யூகிக்க நிரம்ப கிடக்கிறது.

சீனாவின் தேசீய சர்க்கார், பார்மோசாவைப் பற்றுக்கோடாகக் கொண்டிருப்பதையொட்டி, அத் தீவையும் ஆட்கொள்ள சீனக் கம்யூனிஸ்ட்கள் விரைவில் முந்துறுவரென்பது ஒருதலை. வாஷிங்டன் வட்டாரங்களில் இது பற்றி இப்போதே பேச்சு நடமாடத் துவங்கிவிட்டதாம். பார்மோசாவரையில் கம்யூனிஸ்ட்கள் வந்துவிட்டால, பின்னர், அமெரிக்காவுக்கு அபத்தாயிற்றேயென்று பொதுவாக அமெரிக்கர்கள் பேசத் தலைப்பட்டுவிட்டனர். இந்த நிலையில் பார்மோஸாவைக் காப்பாற்றச்செல்வதா, இல்லையாவென்பது 'வால்ஸ்ட்ரீட்' வட்டாரங்களில் பெரும் பிரச்னையாயிருப்பதாகவும் கருதப்படுகிறது. யு. எஸ். பாதுகாப்புக்குச் சிற்சில தளங்களும் ஒக்கினவாவுமட்டுமே இன்றியமையாதவையென்றும் பார்மோசா போயினும் கவலையில்லை யென்றும், அமெரிக்க ராணுவ அதிகாரிகள் கூறுகிருர்களாம். ஆனால், 'பார்மோஸாவைக் கைவிட்டால் பேராபத்தே'யென்று தளபதி மக் ஆர்த்தர் அமெரிக்காவுக்கு அபாய அறிவிப்பு விடுத்துள்ளாரென்று செனட்டர் அலெக்சாண்டர் ஸ்மித் குறிப்பிடுகிருர். இவ்வண்ணம், 'டாலர் ஏகாதிபத்திய'த்துக்குப் பெருந் தலைவலியைக் கொடுத்துக் கொண்டு, சியாங் சர்க்கார் பார்மோஸாத் தீவைப் புகலிடமாகக்கொண்டிருக்கிறது.

தேசீய சர்க்கார் படைகளின் திண்டாட்ட நிலையில் பிரான்ஸின் கெடுபிடி வேறு, எரியும் நெருப்பில் எண்ணெயை ஊற்றுவதைப்போலிருக்கிறது! "அண்டை அயல் நாடுகள் தேசீயப் படைகளுக்குப் புகலிடந் தந்தால், சீனக் கம்யூனிஸ்ட்கள் வாளாயிரார்" என்பதாக மோசிதுங் சர்க்கார் அண்மையில் எச்சரிக்கை விடுத்ததையொட்டி, பிரான்ஸ் விழித்துக் கொண்டுவிட்டது! கம்யூனிஸ்ட்களிடம் தோற்றுப் பின் வாங்கும் தேசீயப்படைகள் இந்தோ-சீனாவில் வந்து புகுவரேல், இடந்தரப்படமாட்டாது; சர்வதேசச் சட்டத்தின் விதிகளே பிரயோகிக்கப்படுமென, பிரஞ்சு அயல்நாட்டுக் காரியாலயம் தெரிவித்துவிட்டது. போரில் ஈடுபட்டிராத ஒரு நாட்டினுள், வேறு இடத்திலிருந்து தோற்றுப் பின்னடையும் படையினர் வந்து புகுந்தால், அவர்களின் படைக்கலத்தைக் களைத்து—ஆயுதமற்றோராக்கிக் -காவலில் வைக்க வேண்டுமென்பதும், முடியுமானல் அவர்களது சொந்த நாட்டுக்கே யனுப்பி விடவேண்டுமென்பதுமே சர்வதேசச் சட்டம் கூறும் விதியாகும். இவ்வண்ணம், பின்வாங்கி பீறிட்டோடும் சியாங் படைகளுக்கு பிரான்ஸ் வேலிபோட்டுவிட்டது! தோற்றோடிக் குடிபுகவும் இடநெருக்கடி யேற்பட்டுத் திணறும் நிலையிலுள்ளனர் தேசீயவாதிகள்!

பார்மோஸா விவகாரமும், இந்தோ—சீன கதையும் இவ்வாறிருக்க, தேசீய சீனாவின் ஆக்டிங் தலைவர் லீ. திடீர் வேட்டு ஒன்று கிளப்பியுள்ளார்! போர் பொறுப்பை விட்டொழித்த அமெரிக்காவுக்கு மருத்துவம் பார்த்துக் கொள்ளப் போகிறேனென்று கூறிக்கொண்டிருந்தவர், இப்போது தென் குவான்டங் குவாங்ஸி மாகாணங்களில் கம்யூனிஸ்ட் முன்னேற்றத்தை யெதிர்த்துத் தகர்க்கப் போகிறேனென்று எதிர்பாராத விதமாய் 'இதயவொலி' யெழுப்பியுள்ளார்! ஷூனிலும் தைவானிலும் சியாங்குக்கும் அவரது ஆதரவாளர்க்கும் என்ன நேரிட்டாலுஞ் சரி, 'நான் இங்கு எதிர்த்துப் பார்த்து விடுகிறேன்' என்று முழக்கியுள்ளார். அன்றியும், அமெரிக்க உதவியையும் பெருத்த அளவில் கோருவாரென்றும், மருத்துவம் பார்க்கச் செல்கையில், முதன் முதலில் இவ்வுதவி கோரிக்கையையே வலியுறுத்துவாரென்றும் தெரிகிறது. தேசீய சர்க்கார் ஓட்டமும் நடையுமாக, உட்கார இடமின்றித் தத்தளித்துக் கொண்டிருக்கிற நிலையில், சியாங்கே ஷேக்கின் முகவரி அடிக்கடி காணமற் போய் வரும்போது, ஆக்டிங் தலைவர் லீ கோரிக்கைக்கு அமெரிக்கா செவிசாய்க்குமா வென்பது ஐயப்பாடே! முதலாளித்துவக் கொள்கை முறியடிக்கப்படாத வகையில், சீனாவில் கம்யூனிஸ்டுகள் வெற்றிக்கு முட்டுக் கட்டைப்போட அமெரிக்கா ஆரம்பத்தில் கிட்டமிட்டு வந்திருக்கலாம்; சியாங்கும்பலுக்கு உதவியுமிருக்கலாம். ஆனால், கூமின்டாங் கட்சியின் இன்றைய நிலையில் அமெரிக்காவுக்குக் 'கருணையுள்ளம்' பிறக்க எந்த வகையிலும் இடமில்லை யென்றே கருதுகிறோம்.

எனவே, சொந்த நாட்டு மக்களாலும் வெறுத்தொதுக்கப்பட்டு, 'சொர்ணபுரி ஆதரவாளர்களாலும்' அலட்சியம் செய்யப் பட்டு, திக்கு திசையறியா நிலையில், இன்னும் 'தில்லுமல்லுகளில்' ஈடுபட்டிருப்பதேனோ தேசீயவாதிகள் என்பதுதான் இன்று உலக மனிதன் கேட்கும் கேள்வி. பிற்போக்கு சியாங் கும்பல் புத்தி திருந்தி கம்யூனிஸ்ட் படைகளிடம் நிபந்தனையின்றி சரண் புகுவதே சரியான காரியமாகும்.

# சீனப் போரில் யு. எஸ். நேரடித் தலையீடு?

—:(0):—

## போர்மோஸாவைக் காக்க வரிந்துகட்டுமா?

**வாஷிங்டன், டிச. 4—**

**தேசிய சீனர்களின் கடைசி புகலிடமான பார்மோஸாவுக்கு சீன கம்யூனிஸ்டுகளால் ஆபத்து நெருங்கி வருகிறது என்றும், இதைக் காப்பாற்ற யுனைடெட் ஸ்டேட்ஸ், தலையிடவேண்டுமா வேண்டாமா என்ற பிரச்னை குறித்து இங்குள்ள வட்டாரங்களில் பேசப்பட்டு வருகிறது. இவ்விஷயமாக, யுனைடெட் ஸ்டேட்ஸின் உயர்தர இராணுவ அதிகாரிகள் யோசித்தனரென்றும், பார்மோஸாவை அவ்வளவு முக்கிய தளமாக அவர்கள் கருதவில்லை என்று தெரிவதாகவும் 'நியூயார்க் ஹெரால்ட் ட்ரிபூனின்' வாஷிங்டன் நிருபர் கூறுகிருர்.**

**யுனைடெட் ஸ்டேட்ஸ் பாதுகாப்புக்கு பிலிப்பைனிலுள்ள சில தளங்களும், ஒகினவுமே மிகவும் முக்கியம்வாய்ந்தது என்று, இவர்கள் கருதுகிருர்களாம்.**

**ஆனால் இவ்விஷயமாக, ஜெனரல் மக் ஆர்தர் வேறுவிதமாக அபிப்பிராயப்படுவதாகத் தெரிகிறது. அமெரிக்காவின் பாதுகாப்புக்குப் பார்மோஸாவும் கம்யூனிஸ்டுகள் வசமாகாது தடுப்பது முக்கியம் என்று மக் ஆர்தர் கருதுவதாக, அவரைப் பேட்டி கண்டுவிட்டு வந்துள்ள யு. எஸ். செனெட்டர் அலெக்சாண்டர் ஸ்மித் கூறுகிருர்.**

**—ருளோப்.**

## ஐ.நா. காஷ்மீர் கமிஷன் அறிக்கை

**ஐ. நா. காஷ்மீர் கமிஷனின் அறிக்கை டிசம்பர் 12-ந் தேதி [illegible] சமர்ப்பிக்கப்படுமென்றும் பாதுகாப்பு சபை டிச 17-ல் கூடி, அதனை ஆலோசிக்குமென்றும் கூறப்படுகிறது. கூட்டத்துக்கு ஷேக் அப்துல்லாவும் செல்வரென்று தெரிகிறது**

## 'சமயோஜித' நடவடிக்கை!

**நேபாள இன் தர்பார் மன்றத்தில் நடைபெற்ற சிறப்பு தர்பார் கூட்டமொன்றில், நேபாள மகராஜாவுக்கு 'பிரிட்டிஷ் ராணுவ லெப்டினன்ட்-ஜெனரல்' கௌரவப் பட்டமளிக்கப்பட்டது. நேபாளத்தில் பிரிட்டிஷ் அரசப் பிரதிநிதியாயிருப்பவர் இம்மரியாதையைச் செய்தார். பிரிட்டிஷ் சர்க்காரிலிருந்து வந்த 'வாள்' ஒன்றையும் மோடி அரசப் பிரதிநிதி மகாராஜவுக்கு அளித்தார்.**

## அணுசக்தி ஆராய்ச்சி

**இந்திய சர்க்கார் அணுசக்தி கமிஷன் என்றதொரு அமைப்பை ஏற்படுத்தியுள்ளது. ஒன்பது விஞ்ஞானிகளடங்கிய ஆராய்ச்சிக் குழுவொன்றும் ஐந்து வல்லுநர்களடங்கிய ஒலிக் கதிர் ஆராய்ச்சிக் குழுவொன்றும் இக்கமிஷனுக்கு ஆய்வுரையளித்து வருகின்றனர். தோரியம் வகைச்சார்ந்த இதர கனிப்பொருள்கள் ஆகியவற்றை இந்திய உபயோகத்துக்கு வைத்துக் கொள்ள வழிவகைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மானைஸைட் என்பதின் ஏற்றுமதி அணுசக்தி ஆக்டின் தடைப்படுத்தப்பட்டிருக்கிறது. இத்தகவல்களைப் பண்டித நேரு 1-ந் தேதி பன்று சட்டசபையில வெளியிட்டார்.**

## பம்பாய் கவர்னர் தாராளம்

**பம்பாய் கவர்னர் ராஜா மகாராஜ்சிங் தனது மாத சம்பளம் ரூ. 5500-ல் 15 சத விகிதத்தைக் குறைத்துக்கொள்ளுமாறு தெரிவித்துவிட்டாராம். சிக்கனத் திட்டத்தை யொட்டியே இம்முடிவாம். நவம்பர் 1-ந் தேதி முதற்கொண்டே இது அமுலுக்கு வருமெனத் தெரிகிறது**

## இஸ்ரேலுடன் வர்த்தகம் ஸிரியா தடை செய்யும்

**டமாஸ்கஸ், டிச. 2—**

**இஸ்ரேலுடன் யாரும் வர்த்தகம் செய்யக் கூடாது என்றும் அப்படி மீறி செய்பவர்களுக்கு கடும் தண்டனை விதிக்கவும் ஒரு மசோதாவை ஸிரியா பார்லிமென்ட் கொண்டு வரும் என்று தெரிகிறது. இந்த மசோதா நகல் தயாரானதும் அரபு லீகுக்கும் ஒருபகுதி அனுப்பப்படும்.**

## பிரான்ஸில் ரேஷன் ரத்து

**பாரிஸ், டிச. 3—**

**பிரான்ஸில் ரேஷன் முறை ரத்தாகிவிடுதல் இன்னும் ஒரு மாத காலத்தில் [illegible] தெரிகிறது.**

**இதனால் முழுவேலை [illegible] 3500 பேர்களும் இதர 1000 சிப்பந்திகளும் வேறு வேலை தேடவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. இவர்களில் [illegible] இலாகாவில் எடுத்துக்கொள்ளப்படலாம்.**

## அடுத்த இலக்கு என்ன?

*ஹாங்காங், டிச 4—*

*செங்டவுக்கு சீனக் கம்யூனிஸ்டு ஆபத்து நெருங்குவதால், அங்குள்ள சீன தேசிய சர்க்கார் சீக்கிரமே வெளியேறிவிடும் எனத் தெரிகிறது.*

*இதற்குப் பிறகு, கம்யூனிஸ்டுகள் மூன்று இடங்களில் ஏதாவதொன்றை நோக்கிய பயலாம் என்று கருதப்படுகிறது:—*

*(1) யுன்னான் தலைநகரான குன்மிங்; (2) போர்மோஸா; (3) திபேத்தை ஒட்டியுள்ள சிகாங், குன்மிங்கிற்கு சீன தேசிய சர்க்கார் மாற்றப்படுவதால், அங்கேயே கம்யூனிஸ்டுகளின் கவனம் முதலில் செல்லக்கூடும். அப்படியானல், போர் இந்தோசீன எல்லையை சமீபித்துவிடலாம்.*

*—ருளோப்*

## நாணய மதிப்புக் குறைவின் விளைவு

**மத்தியத் தேயிலை போர்டு கூட்டம் டிசம்பர் 6-ந் தேதி கல்கத்தாவில் நடைபெறவிருக்கிறது. சென்னையின் பிரதிநிதிகளும் இக்கூட்டத்தில் கலந்துகொள்கின்றனர்.**

**நாணய மதிப்புக் குறைவால் ஏற்பட்ட அதிகப்படி செலவை ஈடுகட்ட நூறு பவுண்டுக்கு செஸ் வரிவிகிதம் ரூ. 1-10-0 விலிருந்து ரூ. 1—14—0 விற்கு உயர்த்துவதைப் பற்றிய இக் கூட்டத்தில் ஆலோசிக்கப்படும் என்று தெரிகிறது.**

**நாணய மதிப்புக் குறைவால் ஏற்பட்ட நஷ்டத்தைச் சரிப்படுத்த தக்க நடவடிக்கை எடுக்கும்படி மத்திய தேயிலை போர்டை சர்வதேச தேயிலை மார்கெட் விஸ்தரிப்பு ஸ்தாபனம் கேட்டுக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது.**

**அமெரிக்காவில் 10 லட்சம் டாலர் செலவில் நடத்தவிருக்கும் தேயிலைப் பிரசாரத்தில் சேர்ந்து கொள்ளும்படி விஸ்தரிப்பு போர்டு மத்திய தேயிலை போர்டை வற்புறுத்தி வருகின்றது.**

**ஏற்றுமதி செய்யப்படும் தேயிலையின் தரத்தைப் பற்றியும் இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்படும்.**

## 37 அரபுகள் கைது

**டாமஸ்கஸ் காலனியைச் சேர்ந்த 37 அரபுகளை யூதர்கள் கைது செய்து சிறை [illegible] வைத்திருக்கின்றனர் என்று தெரிய வருகிறது.**

**டாமஸ்கஸ்ஸிலுள்ள அரபு [illegible] மேற்கொண்டு தகவல்களைக் கேட்டிருக்கிறது.**

**—ருளோப்**

## அமெரிக்காவின் புது அணுகுண்டு

**வாஷிங்டன், டிச. 3—**

**[illegible] யுனைடெட் ஸ்டேட்ஸ் [illegible] 12000 [illegible] இப்பிரதேசத்தில் அதிகார பூர்வமற்ற விமானங்களோ, கப்பல்களோ இப்பிரதேசத்தில் புகாவண்ணம் [illegible] பார்க்கப்பட்டு வருகிறது.**

**—ருளோப்**

# இமாலயத்தவறு செய்துவிட்டு, இதயத்தையும் குத்துவதா?

## தவறுக்குத் திரை, "சொந்த விஷய"மாம்!

## கொள்கைக்குழைப்பதேயல்லாமல் வேறொன்றறியோம்

### நீடாமங்கலத்தில், நீலமேகம் - சீனுவாசன் - கருணாநிதி பேச்சு

நீடாமங்கலம், நவ. 30—

புத்துணர்ச்சியும்-புது வேகமும்—கொள்கைப் பற்றும் கொண்ட தோழர்களும், புதிய கட்சியின் முன்னேற்றப்போக்கில் நம்பிக்கை கொண்டு உழைக்க முன் வந்துள்ள நண்பர்களும் செய்த அறிய முயற்சியின் பயனாக 27-11-49 ஞாயிற்றுக்கிழமை மாலை நீடாமங்கலத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் துவக்க விழா, பெருத்த வெற்றியோடு நடைபெற்றது. விழாவிற்குத் தஞ்சை மாவட்ட தி. மு. கழக அமைப்பாளர் தோழர் கே. கே. நீலமேகம் அவர்கள் தலைமை யேற்றார்கள். மன்னார்குடி, திருவாரூர், கூத்தாநல்லூர், கொரடாச்சேரி, தஞ்சை இன்னும் சுற்று வட்டாரங்களிலிருந்து ஏராளமான தோழர்கள் வந்திருந்தார்கள். இரண்டு நாட்களாய் மழை பெய்து கூட்டம் நடத்தும் இடம் சேறாக இருந்தபடியால் சீனிவாசபிள்ளை சத்திரத்துக்குள் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சத்திரத்துக்குள் மக்கள் நிறைந்திருந்தனர். ஒலிபெருக்கியின் மூலமாக, வாயிற் புறத்தில் நின்று கொண்டிருந்த 3000 (மூவாயிரம்) மக்களுக்கு மேற்பட்டோர், ஆர்வத்தோடு சொற்பொழிவுகளைக் கேட்டனர். குடந்தை சரோஜா திராவிடப் பண்கள் இசைத்தார்.

#### கே. கே. நீலமேகம்

தலைமை வகித்த தோழர் நீலமேகம் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் துவக்கத்துக்கான காரணத்தை விளக்கியதுடன், பெரியார் அவர்கள், கொள்கைப் பற்றுகொண்ட தோழர்களைத் துரோகிகள் என்றும், திராவிடர் கழகத்துடன் இணைந்து நின்று, எதிரிகளை இருக்கித்தாக்குதல் நடத்துவோம் என்று, பெருந்தன்மையாகக் கூறும் திராவிட முன்னேற்றக்கழகத்தைத் துரோகக் கட்சி என்றும் இழித்துரைப்பது, அவருடைய நிலைமைக்குகந்த செயலல்ல என்று குறிப்பிட்டார். மேலும் பேசுகையில், 'எல்லா பத்திரிகைகளையும் படியுங்கள்—எல்லா கூட்டங்களுக்கும் செல்லுங்கள்—பல கருத்துக்களைக் கேளுங்கள்—சிந்தித்து ஒரு முடிவுக்கு வாருங்கள்—நாங்கள் சொன்னதை நம்பாவிட்டால், நரகம் என்று நாங்கள் பயமுறுத்தவில்லை' என்றெல்லாம் பேசிய பெரியார், இப்போது உண்மையறிய வேண்டுமானால் 'விடுதலை'யை மட்டும் படியுங்கள், என்று விளம்பரபடுத்துவதும், எதிர்க் கட்சியின் கூட்டங்களுக்குச் செல்லாதீர்கள் என்று கூறுவதும் எதைக் காட்டுகிறது 'நம்பினால் மோட்சம்! நம்பாவிட்டால் நரகம்" என்ற பயமுறுத்தலைப் போலத்தானே இருக்கிறது. எதிர்க் கட்சியின் கூட்டங்களில் கேள்விகள் கேட்காதீர்கள் என்று பெரியார் குறிப்பிடுவதற்குக் காரணம்; திராவிட கழகத் தோழர்கள் கேள்விகள் கேட்கும் நேரத்தில் பதில் சொல்லுகிற சொற்பொழிவாளர் பெரியாரின் செயல்களையும் கண்டிக்க வேண்டிய அவசியமேற்படுகிறது அது பெரியாரின் சர்வாதிகாரப் போக்கை மக்களுக்குத் தெளிவாக்குகிறது என்கிற அச்சந்தான்" என்றும் குறிப்பிட்டார்.

#### சேரன்

மன்னார்குடி தோழர் சேரன் அவர்கள், இன்றைய காங்கிரஸ் ஆட்சியின் கண்மூடிப் போக்கைக்கண்டித்துச் சிறிது நேரம் பேசினார்.

#### டி. கே. சீனிவாசன்

தோழர் டி. கே. சீனிவாசன் அவர்கள், பெரியாரின் சர்வாதிகாரம் எங்களைப்போன்ற தோழர்களுக்குத் தொண்டாற்ற திட்டம் தீட்டித் தரவும், போராட்டத்தில் இறங்க உத்திரவு தரவும் பயன்பட்டிருந்தால் கூட அதை வரவேற்றிருப்போம். பெரியார் தன்னுடைய சர்வாதிகாரத்தை அதற்கெல்லாம் பயன்படுத்தாமல் — மணியம்மைக்கும் தனக்கும் மணவாழ்த்து கூறுங்கள்—என்று கட்டளையிடப் பயன்படுத்தினார். அதனால் பிரிந்தோம். பிரிந்த நாங்கள் மற்றவர்களைப் போலவோ—அல்லது பெரியார் போட்ட தப்புக் கணக்குப்படியோ — அல்லது ஆதரவாளர்களில் சிலர் 'இதுகளால் என்ன நடக்கும்' என்று ஏளனம் செய்ததற்கு ஏற்பவோ— செயலிழந்து கிடக்கவில்லை. நமக்கேன் இந்தத் தகராறுகள்-பேசாமல் சொந்த வாழ்க்கையைக் கவனிப்போம், என்றுவீட்டுக்குள் சுருண்டுவிடவில்லை. 334 கழகங்கள் நிறுவியுள்ளோம். பட்டிதொடகள் எல்லாம்சேர்த்தால் சுமார் 300 கூட்டங்களுக்கு மேல் நடத்தியிருக்கிறோம். யாரும் காணமுடியாத வெற்றி—ஏளனம் செய்தோர் ஏமாறுகிற அளவுக்குநமக்குக்கிடைத்திருக்கிறது, வெற்றி காரணம் நம்மிடம் கொள்கை இருக்கிறது நம்மிடத்திலே நாட்டு முன்னணி தேவையென்கிற ஆர்வம் இருக்கிறது. பாசிஸ்டுகளுக்கு நாம் பரம விரோதிகள். வெற்றி மாளிகையை நோக்கி வேகமாகச் சென்று கொண்டிருக்கிறோம். இனி மேல் யார் தடுத்தாலும் நம்முடைய வேகம் தடைபடாது. கட்டை விரலை வெட்டுகிற காமராஜாயிருந்தாலும், தோல்வியைத்தான் அணைத்துக் கொள்வார்கள்.

நம்முடைய கழகம் பழமையையும், பாசிசத்தையும் எதிர்க்கிறது. இன்றைய சர்க்காரோ என்றால் அவைகளை ஆதரிக்கிறார்கள். பழமை, பாசிசத்தின் பிறப்பிடம். பழமையை வரவேற்று மகிழும் சர்க்கார் பாசிசத்தையும்வேறு பெயரில் பரப்புகிறார்கள் என்று தான் கூறவேண்டும் உணவு உற்பத்திக்கு குந்தகம் விளைவிக்கிறார்கள் என்று விவசாயத் தொழிலாளர் பலரை சிறையில் போடுகிறார்களே—இதே ஆட்சியாளர்கள், ஓமந்தூரார் காலத்திலே உணவு அபிவிருத்திக்கு விரோதமாக நெல்வயல்களிலே கரும்பு உற்பத்திச் செய்த மிராசுதார்களை என்ன செய்தார்கள்? முதலாளிக்கும் — பணமூட்டைக்கும் முதுகுவளைகிறார்களே சர்க்கார், அது ஏன்? பொருளாதார முடக்கத்தை சரிசெய்ய, இங்குள்ள முதலாளிகள் பணக்காரர்களிடமிருந்து பணத்தை வாங்காமல் அமெரிக்காவிடம் ஓடுவது ஏன்? அமெரிக்காவின் வியாபார மார்க்கெட்டாக இந்தியா ஆகத்தானே!" என்ற கருத்துக்களை விளக்கி நீண்ட சொற்பொழிவாற்றினார்.

#### மு. கருணாநிதி

கடைசியாகத் தோழர் மு. கருணாநிதி அவர்கள், தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க — திராவிட முன்னேற்றக் கழகத்தின் துவக்கத்துக்கான காரணங்களை விளக்கிப் பேசினார். திராவிட முன்னேற்றக் கழ[..]கத் தோழர்கள், [..] அல்ல, என்பதை ஆதாரங்களோடு குறிப்பிட்டார். பொருந்தாத் திருமணத்தை சாக்காக வைத்துக்கொண்டு, தலைவரைக் கவிழ்க்க சூழ்ச்சி நடைபெற்றது என்பது வேதனையான விளக்கம். ஏதாவது சாக்கு கண்டுபிடித்து தலைவரை ஒழிக்க வேண்டும் என்று கருதியிருந்தால் நாங்கள் அதே வேலையாக இருந்திருப்போம். ஆச்சாரியாருக்குக் கருப்புக் கொடி காட்டச் சொன்ன தலைவர், வடநாட்டுக்காரர் பட்டேல் என்பதை மறந்துவிட்டு, அவருக்குக் கருப்புக் கொடி பிடிக்கக் கூடாது என்று சொன்ன நேரத்திலேயே அந்தச் சம்பவத்தைப் பற்பல ஆதாரங்களோடு விளக்கி பெரியாரின் தலைமையை நீக்கியிருப்போம். 'விடுதலை'க்குப் பத்தாயிரம் ஜாமீன் கேட்ட நேரத்தில் "மில் முதலாளிகளே! நீங்களும் நன்கொடை கொடுங்கள், கழகத்தால் உங்களுக்கு நன்மையிருக்கிறது" என்று எழுதிய தலையங்கத்தை வைத்துக்கொண்டு எதிர்த்திருப்போம் அவர் தலைமையை! 'விடுதலை'ப் பத்திரிகையில், "மாயூர் மாகாளியம்மன் சந்நிதானம்" என்ற வார்த்தைகள் ஒரு கட்டுரையில் பிரசுரமாகியிருந்தது. காளி கோயில் என்றுபோட்டால்போதாதா? மாகாளியம்மன் சந்நிதானம் என்று போடவேண்டுமா, எனக் கேட்டுஎதிர்ப்புக்கொடி அப்போதேதூக்கியிருப்போம். இதையெல்லாம்விட, நெஞ்சு திடுக்கிடும் செய்தி, அழகிரிசாமி அவர்கள், சுயமரியாதை இயக்கத்தின் தூணாயிருந்து, பெரியாரின் வலது கையாயிருந்து, மேடையிலே ரத்தக்கைக் கக்கிப் பேசி, பல கஷ்டங்கள் அனுபவித்து குடும்பத்தைப் பற்றிக் கவலைப்படாமல், பெரியாரே தெய்வமென்று உழைத்து உழைத்து உருமாறி, கடைசியில் க்ஷயரோகக் கிருமிகளுக்குத் தன்னுடைய எலும்புகளையும் இரையாகக்கொடுத்து, அந்தப் பாழும் கிருமிகள் தளபதி அழகிரியின் உடலை, தசையை, நரம்புகளை மென்று தின்று, அவரைக் கொஞ்ச கொஞ்சமாய்க்கொன்று கொண்டிருந்த நேரத்தில் —தஞ்சையிலே மாவீரன் மரணப் படுக்கையில் கிடக்க— ஓரத்தநாட்டுக்கு வந்த பெரியார், தஞ்சை வீதி வழியே சென்றவர், சிறிது இறங்கி அந்த ஊருக்குழைத்த உத்தமனைப் பார்க்காமலேயே அலட்சியமாகப் போய்விட்டார்.

#### அழகிரிக்கே அந்தக்கதியானல்?

அது மட்டுமல்ல; அவருக்கு நிதிவேண்டாமென்றார். அழகிரிக்கே அந்தக்கதி யென்றால், எங்களுக்கெல்லாம் பெரியார் ராஜ்யத்திலே என்ன கதியோ? என்று விம்மினோம், வேதனைப்பட்டோம். அந்த வேதனையைத்தான் காட்டிக்கொண்டு மற்ற நண்பர்களிடம் அழுதோமேதவிர, அப்போதுகூட பெரியார் தலைமையைக்கவிழ்க்க சாக்கு கிடைத்து விட்டதாக நினைக்கவேயில்லை காரணம் பெரியார் தலைமையிலே உள்ளபக்தியல்ல அவர்காலம் வரையில் எப்படியோ போகட்டும் என்பதுதான் எங்களுக்கு ஆறுதலாய்இருந்தது. ஆனல், இந்தப் பொருந்தாத் திருமணத்தையும் ஆதரித்[..] கொள்கையைத் தூக்கியெறிய நாங்கள் விரும்பவில்லை. பொறுமைக்கும் எல்லையுண்டு —அவர் செய்த தவறுகள் பலவும், இதைப்போல் இவ்வளவு கடுமையாக எங்களைத் தாக்கியதில்லை. பெரியாரிடம் பல நாளாய் பகைமைகொண்டிருந்தவர்கள் தான் இந்தச் 'சதி'க்குக் காரணம் என்கிறாரே பெரியார், நான் கேட்கிறேன்—'நான் பெரியாரை ஒரு செம்மறியாட்டைப் போலப் பின்பற்றுவேன்" என்று கூறிய தோழர் நீலமேகம் பிரிந்தது ஏன்? 'ஏறியஏணியை உதைக்காதே" என்று "தனியரசி"யல் எழுதிய தோழர் ஆசைத்தம்பி இன்று விலகியது ஏன்? பெரியார், தான் ஏறிய ஏணியான கொள்கையை உதைத்து விட்டார் என்பதுதானே உண்மைக் காரணம்! வள்ளிமுத்து, [..]ளுக்குறிச்சி சோமசுந்தரம், திராவிட நாட்டுக்குக்கவர்னர் ஜெனரலாக வரக்கூடிய[..] என்று, பெரியாரால் புக[..]பட்ட கே. வி. கே. சா[..] இன்னும் பல்லாயிரவர் பெ[..] யார் தலைமை கூடாது என்றது ஏன்? இதை யாசிக்க வேண்டாமா?

#### தவறுக்குத் திரை 'சொந்த விஷ'யமா?

திருமணம் சொந்த விஷ[..] மென்கிறார் பெரியார். ச[..] கராச்சாரியின் சல்லாபத்து[..] குப்பல்லக்குத் தேவைப்படுவது அவருக்குச் சொந்த விஷயம். அய்யரைவைத்துத் திரு[..] செய்வது அவர்களுக்குச்சொ[..] விஷயம். கம்பராமாயண[..] த்தைப் படிப்பது, பண்டித[..] களின் சொந்த விஷய[..] இதையெல்லாம் கண்டித்தவ[..] தன்னுடைய தவறுக்கு "[..] டும் சொந்த விஷயம் என்[..] திரை போடலாமா? [..] சாரியாரையை அபிப்பிராய[..] கேட்டீர்கள - கமிட்டியை கேட்கக்கூடாதா? என்று[..] அப்போதும் சொந்த விஷய[..] என்கிறார்!

பிறகு அவரே சொல்கிறா[..] இது இயக்க நலனுக்கான ஏ[..] ஏற்பாடு என்று! அந்த ஏ[..] பாடு இயக்க நலனுக்கு ஏ[..] பது உண்மையானல், இ[..] க்கத்தைநடத்தும் கமிட்டியை கேட்பதுதானே முறை[..] இமாலயத்தவறுசெய்துவிட்[..] எங்கள் இருதயத்தை[..] வேலால் குத்தியவண்ணமி[..] கிறார். நாங்கள் சாவு வரினு[..] வரவேற்பது என்ற மு[..] வோடு தான், பெரியார் [..] யைப் பின் பற்றினோம். ஆ[..] யால், பெரியாரும் அவருடை[..] ஆதரவாளரும் எங்கள் மீ[..] எறிகிற கடுமையான கணை[..] யும்— ஏளனமொழிகளையு[..] 'விட்டேனு பார்' என்கிற [..] முறுத்தல்களையும் நாங்[..] பொருட்படுத்தப்போவதில்[..] எங்களுக்கு நன்றி ம[..] பான்மை நிச்சயமிருக்கிற[..] பெரியார் நல்லதொரு கொ[..] கையை நமக்குச் சொன்[..] என்பதற்காக நன்றிகள் [..] ரம். அவருக்கு மட்டும[..] அவருடைய இன்றைய [..] வாளர்களுக்கும்! அவ[..] நம்மோடு ஒத்துழைத்தவ[..] என்பதற்காக! ஆனல், பெரியார் இட்ட கட்[..] களை எத்தனையோ க[..] நஷ்டங்களுக்கிடையே, ஊ[..] எதிர்ப்புக்கு ஆளாகி நி[..] வேற்றியிருக்கிறோம். அ[..] [..]ரும் அவர் ஆ[..] குப் பெரியா[..] வாளரும் நன்[..] வில்லை- செலுத்தமாட்[..] கள்.

அதற்கு மாறாக நம்[..] அழிக்கப்பார்க்கிறார்கள். ந[..] அவர்களோடு மோதுத[..] கூடாது என்கிறோம். அ[..] கள் நம்மைத் துரோகக் கட்[..] என்கின்றனர்.

#### கொள்கைக்கு உழைப்போம்

அழிவு—ரத்தம்—எவ்வ[..] பெரிய பயங்கரங்கள் எங்[..] நோக்கி எதிர்த்து வந்தா[..] சரி — புன்னகையோ[..] வேற்று, லட்சியத்துக்[..] ளைத் தியாகம் செய்து [..] ளத் தயாராயிருக்[..] உடையார்பாளையம் [..] யுத்தத்தைக் கண்டவர்கள் [..] கள். அதைவிடக் கடுமை[..] பரிசு எங்களுக்குக் கிடை[..] போவதில்லை! ஆக[..] சர்வசாதாரணமாகத்[..]

[தொடர்ச்சி 4-ம் பக்]

# அன்று வினை விதைத்தீர், இன்று வினை அறுக்கின்றீர்!

## கட்டுப்பாடும் ஒழுங்கும் குலைந்தமைக்குக் காங்கிரசே காரணம்

## அன்று அதிர்ஷ்டம்; இன்று துரதிர்ஷ்டமா?

### அமைச்சர் குமாரசாமியார் அறிவாரா?

...ர் அதிர்ஷ்ட வசமாக, நாம் சுதந்திரம் அடைதவுடனேயே அடிக்கடி குழப்பத்தை உண்டாக்கும் விஷமச் செய்கைகள் தலையெடுக்க ஆரம்பித்திருக்கின்றன.

...தந்திர சர்க்காரை சரிவர நிர்வகிப்பதற்கு நல்ல பயிற்சியும், கட்டு திட்டங்களுக்குட்பட்ட தலைமையும் மிகவும் அவசியம்.

...னநாயக நாடுகளைப் போன்று நமது வாழ்க்கையிலும், காரியங்களிலும் கட்டு திட்டங்களோடு கூடிய ஒழுங்கை வளர்த்துக் கொள்ள வேண்டியது மிகவும் முக்கியம்.

...று மாணவர்களாக இருப்பவர்களே, தேசத்தின் எதிர்காலத்தைப் பாதுகாக்க வேண்டியவர்களாதலால், புதிதாக நாம் பெற்றிருக்கும் சுதந்திரத்தைப் பாதுகாப்பதில் ஆர்வத்தோடும் உற்சாகத்தோடும் இருப்பதோடு உலகத்தின் மற்றப் பகுதிகளுக்கும் ஆத்மிக திருப்தியை உண்டாக்க உதவியாகவும் இருக்க வேண்டும், ஆகவே அதற்கு வேண்டிய கட்டு திட்டங்களும் ஒழுங்குமுள்ள வீரர்களாக நீங்கள் விளங்க வேண்டும், என்றே இந்தியா எதிர்பார்க்கிறது.

...ன்று அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில், சென்னை அமைச்சர் தோழர் குமாரசாமி ராஜா பேசியிருக்கிறார் — ...ல் உபதேசம் செய்திருக்கிறார் மாணவர்களுக்கு.

சொற்பொழிவுக்கும், உபதேசத்துக்கும் வேற்றுமை உண்டு. சொற்பொழிவு எ... ...து, கருத்... ...ளை அள்ளி வீசி, அதன் மூலம் கேட்போர் நல்ல கருத்துக்... ...த் தேர்ந்தெடுத்துக்கொள்ளச் செய்வது. உபதேசம் என்... கேட்போர் இப்படித்தான் ...ந்துகொள்ள வேண்டும் ...ன்று அறுதியிட்டுக் கூறுவது. ...விரண்டில், பின்னதைச் செய்வதில் காங்கிரஸ்காரர்கள் தேர்ந்தவர்கள்.

தோழர் குமாரசாமியாரும் காங்கிரஸ் அமைச்சர் ...னே! எனவே, காங்கிரசின் ...பணிய அ... ...ண்டதில் ஆச்சரிய...

...அதிர்ஷ்ட வசமாக, நாம் ...ரம் அடைந்தவுடனேயே, ...கடி குழப்பத்தை உண்டு ...ணும் விஷமச் செய்கை ...டுக்கின்றன" என்கிறார் ...

...; விதை போட்டவு... ...ன்னாற்றுவிடும், அதற் ...த்தில்தானே அ...

வெளிக் கிளம்பும்! அதுபோலவே காங்கிரஸ் தலைவர்கள் நாடு சுதந்திரமடைவதற்கு முன்னர், சுதந்திர வித்துக்கள் என்று தெரிந்தோ, தெரியாமலோ விதைத்துக்கொண்டு, தண்டவாளத்தைப் பெயர்த்தல், தந்திக் கம்பிகளை அறுத்தல், தபால் பெட்டிகளுக்குத் தீயிடல், அதிகாரிகளைத் தாக்குதல்; பள்ளிக்கூடங்களைப் பகிஷ்கரித்து வெளியேறுதல், மாணவர்களை அரசியலில் பங்கு கொள்ளச்செய்து ஆர்ப்பாட்டத்துக்கு ஆதாரணித்தல் போன்ற விஷவித்துக்களைத் தூவினர், காங்கிரஸ் தலைவர்கள் அதாவது அவைதாம் இன்று அமைச்சர் சொன்னபடி "சுதந்திரமடைந்த உடனேயே ...ளைச்செழுந்து குழப்பங்களை உண்டுபண்ணுகின்றன. இதனை அதிர்ஷ்டம் எனக் கருதுகிறார் அமைச்சர். ஆனால் அதிர்ஷ்டம் என்று கருதப்படுகின்ற சுதந்திரத்தின் விளைவு இவையெல்லாம் என்று நினைக்கின்றனர் விஷமக்காரர்கள்.

வினை விதைத்தால் வினை அறுக்கவும், தினை விதைத்தால் தினையறுக்கலாம். என்பதற்கிணங்க அன்று வினைவிதைத்த காங்கிரசார், இன்று வினையைத்தானே அறுவடை செய்ய முடியும்?

"ஜனநாயகநாடுகளைப்போன்று நாமும் நமது வாழ்க்கையில் கட்டு திட்டங்களை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்" என்கிறார் அமைச்சர். இந்தக் கட்டுதிட்ட உபதேசம் இன்று வலியுறுத்தப்படுமளவு, அன்று வலியுறுத்தப்படவில்லையே, ஏன்? அன்னியரிடமிருக்கும் ஆட்சியை மீட்க, மக்கள் கட்டு திட்டங்களைக் கடந்து விட வேண்டுமா? கட்டு திட்டம், சட்டம் ஆகியவற்றை அலட்சியப்படுத்தி, கண்டதே காட்சி, கொண்டதே கோலமென கொட்டமடிப்பவர்தான் சுதந்திரப்போர், என்றல்லவா அன்று மாணவரிடையே பேசப்பட்டது!

"இன்று மாணவர்களாக இருப்போர்தான் எதிர்காலத்தில் நாட்டை ஆளும் நன்மக்கள்" என்கிறார் இவர். ஆனால் இந்த எண்ணம் அன்று காங்கிரஸ் வட்டாரத்திலேயே காணப்படவில்லையே; சுதந்திரப் போராட்டம் என்ற பெயர், மாணவர்களை காட்டு ராஜாக்களாக ஆக்கப்படுவதற்கான பயிற்சிதான் அளிக்கப்பட்டதே யன்றி, நாடாள, நல்ல ஊக்கம் பெற, பொறுப்புணர்ச்சி பெற யார் வழிகாட்டினார்கள்?

தேசியத்தின் பேரால் நடைபெற்ற திருவிளையாடல்கள் இவைமட்டுந்தானா! அவற்றை விளக்க இவ்வேடு போதாதே! இதனை அட்டூழியங்களும் கலகங்களும் என்றல்லவா மதிக்கப்பட்டன அன்று. தேசிய வீரர்களின் போராட்டம் அன்னிய ஆட்சி நீக்கத்துக்காக மட்டுமா நடைபெற்றது, வேண்டாதோரை யெல்லாம் வீழ்த்தவுமன்றோ அந்தப் போராட்டம் பயன்பட்டது! தேசியப் போர்வையில் இருந்த திராவிடத் தலைவர்களுக்கும், இயக்கப் பற்றுள்ள பெருமக்களுக்கும் தேசியத் தோழர்கள் விளைத்த அல்லல்கள் கொஞ்ச நஞ்சமல்ல.

இன்று அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் கலவரம் நடைபெறுகிறது என்றால், அதற்குக் காரணம் யார்? அன்று தோழர் டேவிட் ரெட்டி துணைவேந்தராக இருந்தகாலத்தில், அவரை ஒழிக்கட்ட ஆரியவர்க்கம் மாணவர்களைப் பயன்படுத்திக்கொண்டது.

இவையொரு புறமிருக்க, கம்யூனிஸ்டு தோழர்கள் தமது நோக்கோ பாதை, சர்வகலாசாலையை, சாவ கலாட்டாசாலையாக மாற்றிக்கொண்டு வருகிறார்களே. அமைச்சர் குறிப்பிடும் மாணவர்களின் ஒழுக்கக் கட்டுப்பாடு இன்மையாகிய கேடுகளுக்கு கம்யூனிஸ்டு தோழர்களுக்கும் பெரும் பங்கு உண்டு. ஆம்; கம்யூனிஸ்டுகள் தான் யார்? அவர்களும் அந்தத் தேசிய குட்டையில் ஊறிய மட்டைகள்தானே!

எனவே, இவை அனைத்தையும் சற்று ஆராய்ந்து பார்க்கின்ற வேளையில், கலாசாலை மாணவர்களின் கட்டுப்பாடு ஒழுக்கம் முதலியன சீர்குலைந்தமைக்குத் தேசியமும், தேசியத்தலைவர்களுமே காரணம் என்பதில் ஐயமுண்டோ.

## உடல் ஒட்டிக்கொண்டுள்ள உடன் பிறப்பாளர்கள்!

பீடர்மாரிட்ஸ்பார்க், டிச. 2— நான்கு மாதங்களுக்கு முன்பு ஆப்பிரிக்கப் பெண்ணுக்குப் பிறந்த இரட்டைக் குழந்தைகள் இன்னும் உயிருடனேயே இருக்கின்றன!

இக்குழந்தைகள் இடுப்பு அருகில் ஒட்டிக்கொண்டு பிரிக்க முடியாதபடி இருக்கின்றன.

இக்குழந்தைகளுக்கு மொத்தம் நான்கு கைகளும் மூன்று கால்களும் இருக்கின்றன. ஒருகாலுக்கு 8 விரல்கள் இருக்கின்றன.

—ருளேப்

## இயலைத்தவறு...

—[ 3-ம் பக்கத் தொடர்ச்சி ]—

விட்டோம். கொள்கைக்கு உழைப்பது தவிர வேறு ஒரு குற்றமும் செய்யவில்லை. வருவது வரட்டும்" என்று குறிப்பிட்டுவிட்டு, பிறகு தற்கால அரசியல் நிலை, புது அரசியல் வகுக்கப்படுவதில் உள்ள கோளாறுகள்—புது அரசியலில் அரசியல் சம்மந்தமான பதங்களுக்கு இந்தி மொழி உபயோகிக்கும் கொடுமை—சென்னை அரசாங்கத்தின் பொருளாதார நிலைமை இவைகளைப்பற்றியும் நீண்ட நேரம் பேசினார்.

தலைவர் முடிவுரைக்குப்பின், நன்றி கூறலுடன் கூட்டம் இனிது முடிவுற்றது. தோழர்களின் கூட்டுமுயற்சியும்—குறிப்பாகத் தோழர் சந்திரசேகரன் அவர்களின் உதவியும் விழாவின் வெற்றிக்குக் காரணமாக இருந்தது.

(வி. உ.)

# இந்திய பகுத்தறிவாளர் முதல் மாநாடு

இந்திய பகுத்தறிவாளர் முதல் மாநாட்டின் வரவேற்புக்குழுத் தலைவர் தோழர் எஸ். இராமநாதன் கீழ்க்கண்டவாறு அறிவிக்கிறார்.

டிசம்பர் மாதம் 18-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை இந்திய பகுத்தறிவாளர்களின் முதலாவது மாநாடு நடைபெறும். பகுத்தறிவியக்கத்தை இக்கால முறையில் அமைத்து, அதனை உலகச் சிந்தனையாளர் கழகத்தோடு இணைக்கும் நோக்குடன் வரலாற்றிலேயே முதன் முறையாக இந்தியாவிலுள்ள பல்வேறிடங்களின் சார்பாகவும், பகுத்தறிவாளர்கள் ஒன்று கூடுவதால், இம்மாநாடு வரலாற்றில் இடம் பெறத்தக்க நிகழ்ச்சியாயும், சென்னை ராஜாஜி மண்டபத்தில் இம்மாநாடு நடைபெறுதற்குச் சென்னை அரசியலார் இசைந்துள்ளார்கள். மாநாட்டுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ரகுநாத் பி. பிரஞ்சிபே, டிசம்பர் 16-ந் தேதியன்று சென்னை வந்து சேருகிறார். மாநாடு 18-ந் தேதி காலை 9-30 மணிக்குத் துவக்கப்பட்டு, முற்பகற் கூட்டத்தில் வரவேற்புரையும், தலைவர் தேர்தலும், தலைவர் சொற்பொழிவும் நடைபெறும். இடைவேளை உணவுக்குப் பின், மாநாடு பிற்பகல் 3 மணிக்கு மீண்டும் துவக்கமாகி 6 மணிக்கு முடிவுறும்.

உலகப் பகுத்தறிவியக்கத்துடன் இணைந்து பணியாற்றும் பகுத்தறிவுப் பாசறைகளைப் பல்வேறு மாநிலங்களிலும் தோற்றுவிக்கத் தேவையான அனைத்திந்தியக் குழு ஒன்று அமைத்தலே இம்மாநாட்டின் முக்கிய வேலையாகும். நன்கு சிந்தித்தல், சிந்தனையில் உதித்த கருத்தினை வெளியிடல், வெளியிட்ட கருத்து பரவக் கழகம் அமைத்தல் ஆகியவழிகளில் பகுத்தறிவு எவ்வித தடையுமின்றி இயங்கவேண்டுவதன் அவசியத்தை வலியுறுத்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்படும். பிறப்பால் விளைந்துள்ள சாதிமுறைகள், உயர்வு தாழ்வுகள், இழிவுகள், இன்னல்கள் ஆகிய அனைத்தையும் உடனடியாக அழித்தொழிப்பதே முதன்மையாகச் செய்தற்குரிய பணி என்பதுபற்றியும் விவாதிக்கப்படும். இந்நாளில் சாதியைப் பாதுகாப்பார் யாருமில்லை என்றாலும், இம்முறையானது முடிவேதுமின்றி நீடித்தல் கண்டு, கவலை உறுபவர்களுக்கிலையாது. இக்கவலையற்ற போக்கினால் சமூக நலத்திற்கு விளைந்திடும் கேடுகள், உடபொதிந்த நிலைகளோடை முறையில் வெளி கொணர்ந்திடும் வருணாஸ்ரம தர்மத்தைக் காட்டிலும் மிகவும் அதிகமானவை. இந்த உணர்ச்சியற்ற தன்மையை எல்லாம் போராடி அழிப்பதற்கேதுவான வழிகள் வகுப்பதே மாநாட்டுவேலை திட்டமாகும். மதத்தால் விளைந்துள்ள மூடநம்பிக்கைகள் போன்ற பல்வேறு இன்னல்களையும் துடைக்க வேண்டி, மத ஆதிக்கக் கொடுமையினை எதிர்த்துப் போராடவேண்டிய நிலையே நம் கவனத்தை ஈர்த்து நிற்கும். இப்போதுள்ள இந்திய சர்க்கார் ஆட்சி முறையில் மதச் சார்பற்ற தன்மை விளங்க வேண்டுவது அதிக அவசியம் என்பதை வலியுறுத்தலே பகுத்தறிவுவாதியின் கோட்பாடாகும். அதன்படி மதத்தை அடியோடழித்தல் —குறிப்பாக, இளஞ் சிறுவர்களை, ஆண்மையை அழிக்கும் மதக் கல்வியால் உண்டாகும் கேட்டினின்றும் மீட்டுக் காத்தல், ஆகியவைகளே ஆட்சியாளரின் நீங்காக் கடமையாகும். ஆட்சி முறைத் திட்டத்தில், வெறும் பேச்சளவில், இந்திய நாடு மதச்சார்பற்ற நாடாய்த் திகழும் என்று அறிவிப்பதுடன் மட்டும் நின்றுவிடாமல், அவ்வித மதச் சார்பற்ற தன்மை மக்கள் உள்ளத்திலும் நன்கு பதிந்திடும் வண்ணம் அதனைச் செயலளவிலும் காட்டிச் சட்டத்தின் துணைகொண்டு நடைமுறையிலும் கொண்டுவருதற்கு ஆட்சியாளர் முற்பட வேண்டும்.

இத்தகைய செய்கையால் மட்டுமே அண்மையில் நம்நாட்டுப் பிரிவினையின்போது நிகழ்ந்த பயங்கரமான விளைவுகளைத் தடுத்தல் இயலும். மேற்சொன்னவை அனைத்தும், எல்லாப் பகுத்தறிவுவாதிகளுக்கும் பொதுவாக உள்ள எண்ணங்களின் குறிப்புக்களேயாம். இத்தகைய பொருட்களைப் பற்றியே மாநாட்டில் கூடும் பிரதிநிதிகள் நன்கு ஆய்ந்து, பொருத்தமான தீர்மானங்களை உருவாக்குவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஒரு சில பிரதிநிதிகள், தங்கும் இடம் வேண்டி எனக்கெழுதியிருக்கிறார்கள். முன்னரே அறிவிப்பவர்களுக்கு உணவு விடுதிகளில் இடம் ஒதுக்கி வைப்பதற்குத் தங்களாலியன்றவரை வரவேற்புக் குழுவினர் முயலுவர். தொலைவிலிருந்து மாநாட்டிற்குவந்து கலந்து கொள்ளும் பிரதிநிதிகள், ஏதாவது வசதிக் குறைவு நேரிடில், அதைப் பொருட்படுத்த மாட்டார்களென்றே எண்ணப்படுகிறது. நாம் எடுத்துள்ள பணியை ஆற்றுதற்கு முன்வரும் ஒவ்வொரு பகுத்தறிவுவாதியும், சமூகச் சூழ்ந்து நிற்கும் அறியாமையையும் அதனை எதிர்த்துப் போராடுவதில் உண்டாகும் இன்னல்களையும் சகிக்கத்தான் வேண்டும். இது அவர்களால் இயலுமென்றே நானும் நம்புகிறேன். சென்னைப் பயணத்தின்போது, அவரவர் தங்கட்கு நேரிடக்கூடிய தொல்லைகளையும், வசதிக் குறைவுகளையும் பொறுத்துக்கொள்ள வேண்டும் என்றும் வேண்டுகிறேன்.

தாங்கள் வந்து சேரும் தேதி குறித்தும், உணவு விடுதியில் இடம் வேண்டுமா என்றும் எனக்கு எழுதவும். வரவேற்புக்குழுவிற்கு நிதி தேவை. எனவே, தங்கள் நன்கொடையை ஆவலுடன் எதிர்பார்க்கிறோம். நிதி மிகுந்தோர் அன்பு கூர்ந்து நன்கொடை அளிக்கவும். மற்றவர்கள், பிரதிநிதிக் கட்டணமும் உள்ளிட்ட ரூபாய் 10-க்குவிற்கப்படும் வரவேற்புக்குழு சீட்டுகளை வாங்கிக்கொள்ளலாம். பிரதிநிதிச் சீட்டு 3 ரூபாய். மாநாட்டில் பங்கு கொள்ளாது அனுதாபிகளாய் மட்டும் இருக்க விரும்புபவர்களுக்குப் பார்வையாளர் கட்டணம் 1 ரூபாய் கீழ்க்கண்ட முகவரிக்குப் பணம் அனுப்பலாம்.

செயலாளர், வரவேற்புக்குழு
9. பிராட்வே, சென்னை.

## நாஜி ரகசிய இயக்கத்தார் கைது

வியன்னா, டிச. 2— புது நாஜி ரகசிய இயக்கத்தைச் சேர்ந்த 6 பேர் 13,000 அடி மலை உச்சியில் கண்டுபிடிக்கப்பட்டு, கைது செய்யப்பட்டிருக்கின்றனர். இவர்கள் ஹிட்லர் குருவளிப் படையினர் தரிக்கும் கருப்பு உடைகளை அணிந்திருந்தனராம்.


## ஏஜண்டுகள் தேவை

கீழ்க் கண்ட இடங்களுக்கு நமது 'மாலை மணி'யை விற்பனை செய்ய, முன்பணம் கட்டக் கூடிய ஏஜண்டுகள் தேவை.

1 கடயநல்லூர்
2 உதகை
3 ராசிபுரம்
4 துவரங்குறிச்சி
5 அம்பாசமுத்திரம்
6 ஆலந்தூர்
(இராமநாதபுரம் ஜில்லா)
7 பாப்பா நாடு
8 சென்னிமலை

மானேஜர்
"மாலை மணி" சென்னை

# திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டங்கள்

**5—12—49**

திண்டிவனம் : சி. என். அண்ணாதுரை.

**7—12—49**

தக்கோலம் :— இரா. நெடுஞ்செழியன், கே. அ. மதியழகன், வி. முனுசாமி.

## நாட்டு நடப்பு

### வ. உ. சி படிப்பகம்

கல்விடைக் குறிச்சி, நவ. 13—

இவ்வூர் வ. உ. சி. படிப்பகத்தின் துவக்கவிழா 6-11-49 ஞாயிறன்று மாலை 6 மணிக்கு இவ்வூர் தோழர் கே. எஸ். சுப்பிரமணியன் தலைமையில் சிறப்புடன் நடந்தேறியது. தோழர் டி. ராமச்சந்திரன் ஏ. எச். எம். மதார்; எஸ். பிச்சாண்டி, எஸ். ஹமீது முதலியோர் சொற்பெருக்காற்றினர்.

பின் எஸ். ஹமீது செயலாளராகவும் ஏ. எம். எம். மதார் துணைச் செயலாளராகவும். எஸ். நல்லசிவன் தலைவராகவும் எஸ். பிச்சாண்டி பொருளாளராகவும் ஏழு பேர் கொண்ட செயற்குழுவொன்றும் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர் பின் செயலாளர் நன்றி கூறக் கூட்டம் இனிது கலைந்தது.

### திராவிடர் முன்னேற்ற இளைஞர் கழகம்

போராவூரணி, நவ. 25—

31—10—49 அன்று தோழர் வி. கோவிந்தன் தலைமையில் கூடி முன்னர் திராவிடர் இளைஞர் கழகம் என்றிருந்த அதே கழக உறுப்பினர்களின் ஒருமித்த முடிவின் பேரில் திராவிடர் முன்னேற்ற இளைஞர் கழகம் என மாற்றி அமைக்கப்பட்டது.

செயலாளர்கள் — வி கோவிந்தன், என். ரக்கிரிசாமி; பொருள் உறுப்பினர்- கே. மாணிக்கம்; விளம்பர உறுப்பினர்- எம். கே. கணேசன், இணைய செயற்குழு உறுப்பினர்கள்— அ. சுப்பையன், வி. நடேசன், எஸ். துரைராஜ். டி. கருப்பையா, எஸ். மாணிக்கம், ரெ. கருப்பையன், பி. சாகுல்ஹமீது, கே. ஒ. பெத்தைதடன், கே. அபுபெக்கர். (வி.உ)

### மறுமலர்ச்சி மன்றம்

பெரியகுளம், நவ. 30—

28-11-49 இரவுமணிக்கு (தென்கரை தெற்கு ர வீதியில்) "மறுமலர்ச்சி மன்றம்" திறவப்பட்டது. அவ்வமயம் தலைவர்-ப. அறிவுக்கண்ணழகனார், பொருள் உதவியினர் அ. மு. சுல்தான். விளம்பர உறுப்பினர்: வ. சோணைமுத்து செயற்குழு உறுப்பினர்கள்:-பெ.சு. குழந்தைவேலன் பெ. மாரியப்பன் ப. அறிவுக்கண்ணழகனார் க. இளமுருகன், அ. மு. சுல்தான், வ. சோணைமுத்து, இணையோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பின்பு செயலாளர் நன்றி கூற இரவு 9 மணிக்கு கூட்டம் இனிது முடிந்தது.

### திருவள்ளுவர் இளைஞர் கழக முதலாண்டு விழா

சென்னை, டிச. 4—

சென்னை முத்தியாலுப்பேட்டை திருவள்ளுவர் கழகத்தின் செயற்குழுக் கூட்டம் கழகத் தலைவர் தோழர் பி. வீராசாமி தலைமையில் நடைபெற்றது. 12 செயற்குழு உறுப்பினர்கள் வந்திருந்தனர். கழக முதலாண்டு விழா நடத்துவது பற்றி எல்லா தீர்மானங்களும் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன ஜனவரி மாதம் 22-ம் நாள், ஆண்டு விழாவை நடத்துவதென்றும், விழாவிற்கு காவலர் பாரதிதாசனை தலைமை வகிக்க அழைப்பதென்றும்

திரு. வி. க. பேராசிரியர் சேதுப்பிள்ளை, தோழர் அண்ணாதுரை, டாக்டர் மு. வரதராசனார் நகைச்சுவை என். எஸ். கிருஷ்ணன், ஆகியோரை, விழாவில் பங்கு கொள்ளுமாறு வேண்டுவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

### வ. உ. சி. நினைவு நாள்

தஞ்சை, நவ. 25—

"தஞ்சை ஹூட் கூட்டுறவு மாணவர் பயிற்சிக் கழக" சார்பில் 22—11—49 மாலையில் வ. உ. சிதம்பரனார் நினைவு நாள் கொண்டாடப்பட்டது. கழகத் தலைவர் தோழர் சி. மாதவ் நாயுடு அவர்களால் வரவேற்கப்பட்ட கரந்தைப் புலவர் கல்லூரித் தலைமை ஆசிரியர் தோழர் உ. பழனி B.O.L. அவர்கள், வ. உ. சி. யின் வாழ்க்கை, மொழிப்பற்று, நாட்டின் விடுதலை ஆர்வம், அவர் இயற்றிய இலக்கியங்கள், மொழி பெயர்ப்பு, நூதவிகளை பற்றி விரிவாகவும் தெளிவாகவும் பேசினார்கள். தோழர் இரா. சுப்பையன் வ. உ. சி. யின் குடும்பத்தின் தற்கால நிலை, தமிழன் செய்ய வேண்டியவை பற்றி பேசினார். தோழர் சரவண சாமியால் நன்றி கூறப்பட்டு, அவை கலைந்தது."

* * *

பெங்களூர், நவ. 2—

27—11—49 ஞாயிறு காலை 10-மணிக்கு மேற்படி கழகக்கட்டிடத்தில் 'வ. உ. சி.' விழா கொண்டாடப்பட்டது. தோழர் எஸ். பி. தியாகராசன் தமிழிசை பாடினார் தோழர் பாபுராவ் தலைமை தாங்கினார். தோழர்கள் சி. லட்சமன், ஜே. ஆரோக்கியதாஸ், இளஞ்சேரன், ஆ. ந. ஈசுவரன் ஆகியோர் வ. உ. சி. யின் வாழ்க்கையையும், அவர் தேசத்திற்காக செய்த மாபெரும் தியாகத்தையும் பாராட்டிப் பேசினர். இறுதியாக தலைவர் தம் முடிவுரையில் ஒவ்வொரு தமிழனும் வ. உ. சி. யைத் தெரிந்து கொள்ளவேண்டும் என்றும், வ. உ. சி. யின் பெயரால் அநேக கழகங்கள் தோன்ற வேண்டும் என்றும் கூறிமுடித்தார். செயலாளர் இளஞ்சேரன் அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிது முடிந்தது.

* * *

சிதம்பரம், நவ. 29—

தில்லை தொல்காப்பியர் இளைஞர் மன்றத்தின் சார்பில் வளமளித்த வ. உ. சி. யின் நினைவு நாள் 27-11-49 ஞாயிற்றுக்கிழமை சிதம்பரம் தாலுகாத் தெரு, 'அண்ணா' அகத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் கொண்டாடப்பட்டது. கூட்டத்திற்கு மன்றத் தலைவர் தில்லை அமான் பி. ஏ. (ஆனர்ஸ்) அவர்கள் தலைமை வகித்து 'சிறப்பளித்த சிதம்பரம் என்ற தலைப்பில் தமது முன்னுரையில் வ. உ. சி. யின் வாழ்வுச் சரிதையைச் சுருக்கமாகவும், அவரது தொண்டு மிழுகத்தை உருவாக்கியதுபற்றியும் பேசினார் தொடர்ந்து த. வெசுப்பிரமணியம் ... வெங்கடேசன், சம்பந்தன் மாசிலாமணி முதலியோர் வ. உ. சிக்கும் தமிழகம் உருவானதற்கும் நெருங்கிய தொடர்பு ஆதித்தம் அவரது இலட்சியங்களை பூர்த்தி செய்வதில் தமிழர்களாகிய நமது பங்கு எவ்வளவு என்பது பற்றியும் அரிய சொற்பொழிவாற்றினர். பின்னர் திரு. தில்லை அமான் தமது முடிவுரையில் ஒவ்வொரு தமிழனும் ஒவ்வொரு வ.உ.சி.யாக மாறவேண்டுமென்றும் தாழ்ந்த தமிழகத்தின் தலைமையை உயர்த்தத்தக்கதோர்வழி அதுவேஎன்றும் ... வாய்ப்பட்டுக் கிடக்கும் அவரது ... தகுந்த ... பற்றியும் நீண்ட சொற்பொழிவாற்றியபின், நன்றி கூறலுடன் கூட்டம் இனிது முடிந்தது. உறுப்பினர்களும், உதவினர் அல்லாதோரும் பலர் வந்திருந்தனர்.

## மழை, புயல் ஏற்படுவதை ராடார் அறிவித்து விடும்

லண்டன், டிச. 4—

மழை, புயல் இவைகள் ஏற்படும் என்பதை முன்னதாகவே அறிவித்துவிடக்கூடிய சக்தி ராடாருக்கு இருக்கிறதென்பது இப்பொழுது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

40 மைல் வரை பெய்யக்கூடிய மழை 150 மைல் தூரம் வரை அடிக்க கூடிய புயல் ஆகியவைகளை மிகவும் முன்னதாகவே ராடார் ஸ்டேஷன்கள் அறிவித்துவிட முடியும் என்று தெரியவருகிறது. —ருனோப்

## அங்கிருந்தும் - - வெளியேற்றம்

ஹாங்காங், டிச. 4—

குவாங் ஸி மீதும் கம்யூனிஸ்ட் படையெடுப்பு ஏற்பட்டுவிட்டதால் அங்குள்ள சீன தேசிய சர்க்கார் வெளியேறி ஹைனன் தீவுக்குப்போய்விட்டது என்று இங்கு செய்தி கிடைத்திருக்கிறது.

## அங்கும் 'வியாபகம்!'

டமாஸ்கஸ், டிச. 4—

மாஷ்டா என்ற கிராமத்தில் கம்யூனிஸ்டுகளின் இரகசிய இடம் இருப்பதை போலீசார் கண்டுபிடித்திருக்கின்றனர். சில வெளியீடுகளும் அச்சு இயந்திரங்களும் கைப்பற்றப்பட்டிருக்கின்றன.

## காதணி விழா

ஓமலூர், டிச. 4—

இவ்வூர் பிரபல வியாபாரியும், பொது ஜன ஊழியரும், திராவிட முன்னேற்றக் கழகத் தலைவருமான தோழர் பேபி அவர்களின் செல்வன் எஸ். கே. ராஜனின், காதணி விழா, 30-11-49 அன்று ஓமலூர் தோழர் பி. இரத்தினசாமி அவர்கள் தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. அதுபோது திருச்சி, தோழர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள், செல்வனை வாழ்த்தி, பகுத்தறிவுக் கொள்கைக் கேற்ப தோழர் பேபி தனது செல்வனின் காதணி விழாவை நடத்தினமை குறித்துப் பாராட்டிப் பேசினார்.

ஜலகண்டபுரம் தோழர் எஸ். இராசகோபாலனார் முன்னின்று யாவரையும் வரவேற்றார். செல்வனை வாழ்த்தி ஏராளமான கடிதங்களும், தந்திகளும் வந்தன. பரிசுகளும் வழங்கப்பட்டதை. மாவட்டத்தின் பல பகுதிகளிலிருந்தும், முக்கியஸ்தர்களும், உத்தியோகஸ்தர்களும் வந்து விழாவில் கலந்து கொண்டனர். செல்வன் ராஜனின் நன்றி கூறலுடன் விழா முடிவுற்றது. பிறகு அனைவருக்கும் விருந்து நடைபெற்றது.

[இதன் நினைவாக தி. மு. கழகத்திற்கு ரூபாய் ஐந்து வரப் பெற்றோம். நன்றி! ஆ-ர்]

## போகிற போக்கில்....!

'ஒழுங்கு கட்டுப்பாட்டுடன் நாம் இல்லாவிடில், கிடைத்த சுதந்தரம் பறிபோகும்'

— பிரதமர் ராஜா

ஒழுங்கு கட்டுப்பாடு முன்பு இல்லாததால்தான், சுதந்தரம் வந்தது போலும்!

• • •

சர்க்கார் அதிகாரிகள் இலவசமாக சினிமாவுக்குப் போவதால், தமாஷா வரியில் நஷ்டமேற்படுவதாக சர்க்கார் கருதுவதால், அவர்கள் அப்படி இலவசமாகச் செல்லக்கூடாதென, ம மா. சர்க்கார் உத்தரவிட்டுள்ளது.

— செய்தி

அப்படியானால், தமாஷா வரியைமட்டும் கஜானாவில் கட்டிவிட்டு, சினிமாவுக்கு இலவசமாகச் செல்லலாம் அதிகாரிகள்!

* * *

'சீர்திருத்தங்கள் செய்வதில் மேலும் தாமதமானால் கம்யூனிஸ்ட் வழிகளையே பின்பற்ற வேண்டியிருக்கும்.

--நேபாள காங்கிரஸ் தலைவர்

பின்பற்றும் பிரச்னையேன்? அவர்களே நெருங்கி வந்து கொண்டிருக்கின்றனரே, ஆட்கொண்டருள!

* * *

'அமைதி விருப்பமே மனித சுபாவமாயிருக்க, ஆயுத பரிகாரம் ஏன்?"

— அமிருத கௌரி

அமைதியை விரும்புவது மனித சுபாவமாயிருக்காலாம்; ஆனால், மனிதத் தன்மையற்றோரைப்பற்றித்தானே இப்போது பேச்சு!

* * *

"போலீஸ் அதிகாரி வீட்டில் திருடியதாக; கான்ஸ்டபிளுக்கு ஹை கோர்ட்டில் விடுதலை"

—பத்திரிகை செய்தித் தலைப்பு

கீழ்க் கோர்ட் திருடவில்லையென்றுகூறி, தண்டனையளித்திருக்குமோ!

* * *

'ரஷ்ய ஆக்கிரமிப்பாளருக்குப் பணிந்தால் ஆபத்து!

— ஐ. நா. வில் சீனு கூற்று

யாருக்கு?

* * *

'அமெரிக்காவுக்கு யானைகள் பரிசு அனுப்பும்படி, நேருக்கு நேரு வேண்டுகோள்!

— செய்தி

'காக்காய் பிடிப்பது' என்ற வழக்கு மாறி, இனி 'யானையனுப்புவது' என்றபுது வழக்கு உதயமாகலாம்!

• • •

"சிறப்பால் பெற்றதொழில் குறித்தும் பெருமைபட வேண்டும் நாம்: கவர்னர்-ஜெனரலின் விபரீதப் பேச்சு"

—பத்திரிகை செய்தி தலைப்பு

'பெரியார் ராஜகோபாலாச்சாரியார். இப்படி பேசியிருப்பது! இது அவரது 'சொந்த'க் கருத்தாக இருக்கலாம்!

• • •

'சென்னை சர்க்கார் கோரிக்கை டில்லியில் தூக்கம்'

— பத்திரிகை செய்தித்தலைப்பு

சென்னையில் பல இரவுகள் கண் விழித்திருந்து அங்கு சென்றிருக்குமோ!

* * *

'சிங்கவரம் ரங்கநாதர் கோயிலுக்கு கவர்னர் தம்பதிகள் விஜயம்'

—செய்தி

மதச்சார்பற்ற சர்க்காரின் புதல்வரல்லவா! அதனால்தான் 'சம்பதிசமேதராய்' வழி காட்டுகிறார்!

* * *

மேல் நாடுகளுக்குப் புத்தி புகட்டவே, காமன்வெல்த்தில் இந்தியா நீடிக்கிறது.

-- அர்ஜென்டைனாவில் இந்தியத் தூதர்

மேல் நாடுகள் புத்திசாலிகளாவதற்குத்தான் பொறுத்திருக்கிறதா இந்தியாவின் 'பூரண சுதந்தரம்'?

## மலான் சர்க்காரின் செய்தி 'ரேஷன்' முறை!

தென் ஆப்பிரிக்காவிலிருந்து வெளிநாடுகளுக்கு அனுப்பப்படும் செய்திகளின் பிரதிகள் மலான் சர்க்கார் மந்திரிகளுக்கு அனுப்பப்பட்டு வருகிறதென்று 'கேப் ஆர்கஸ்' என்ற பத்திரிகை எழுதுகிறது.

மலான் சர்க்காரின் தபால் மந்திரி ஏவிஸ்மஸ் செய்தி தணிக்கை முறையைப் புகுத்தும் உத்தேசமில்லை என்று குறிப்பிட்டிருப்பதை இப்பத்திரிகை எடுத்துக்காட்டி. இது தணிக்கை இல்லாமல் வேறு என்னவென்று கேட்டிருக்கிறது.

### ஆதித்திராவிடர்க்கு மனைக்கட்டுகள்

ஆதித்திராவிடர்களுக்கு மனைக்கட்டுகள் கைப்பற்றித் தரும் திட்டங்களை அமுல் செய்ய முனைந்து விட்டனராம் சென்னை சர்க்கார். இது காரியத்திற்காக டெபுடி கலெக்டர் கிரேடிலுள்ள அதிகாரிகளையும் தேர்ந்தெடுத்து வருகிறார்களாம். ரெவினியூ இலாகாவினின்றும் அதிகாரிகள் பெரிதும் தெரிந்தெடுக்கப் படுவரென அறியப்படுகிறது.

### அறிவிப்பு

ரெஜின முட்டை பவுடர், முட்டைப்பூச்சி எறும்பு முதலியவைகளை நாசமாக்க பத்த நித்திரை தருகிறது. சாம்பிள் டின் 1-க்கு 8 அணா ஸ்டாம்பு அனுப்பவும். ஜி. ராமு ... ஏஜன்ஸி, மதுரை.

மறத் தமிழரின் தன்மானத்தை எடுத்துக்காட்டும் சிறந்த சரித்திர நாடகம்

6—12—49 செவ்வாய் இரவு 9-மணிக்கு

சென்னை

சவுந்தரிய மகாலில்

**வீர கட்டபொம்மன்**

தென்னாட்டில் புகழ்பெற்ற S. V. கணேச பாண்டியன் பாதர் வெள்ளை பாகத்தில்தோன்றி சால திறமையுடன் சிலம்ப வித்தை செய்வார்.

"திராவிடன்" ஆசிரியர் தோழர் N. V. நடராசன் அவர்கள் தலைமை வகிப்பார்.

கட்டணம் :— ரூ. 2-8-0 1-8-0, 1-0-0, 0-8-0. (வரியுட்பட)

—வே. தா. பெரியசாமி.

## நன்றி!

அன்புடையீர், வணக்கம்,

எனது திருநிறைச்செல்வன் எஸ். கே. ராஜனின் காதணி விழா 30—12—49-ல் நடைபெற்றபோது வந்திருந்து சிறப்பித்தமைக்கும், வாழ்த்துச் செய்திகள் அனுப்பிய தோழர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

எஸ். கே பேபி, ஓமலூர்

வெளிவருகிறது!

## "புராக்ரஸ்"

திராவிடர் ஆங்கில வார வெளியீடு

ஆசிரியர்: C. N. அண்ணாத்துரை M.A.,

தனிப் பிரதி அணா 1. — வருடசந்தா ரூ. 3

முன்பணம் கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை

விவரங்கட்கு:—

"மாலை மணி" பதிப்பகம்,

சென்னை—1.

## இனவழிப் பிரிவினையை...

[1 பக்கத் தொடர்ச்சி]

இத்தேசத்தைப் பிரித்தோர். ஆனால், பிரசாரம் வேறு, நிர்வாகம் வேறு," என்று கூறி இருக்கிறார். பல வருஷங்களுக்குமுன், தான் பேசிய பேச்சு டபனற்றப் பேச்சு என்பதை ஆச்சாரியாரே உணர்கிறார் போலும்! பிரசார வேலைக்காக மொழிவழி நாட்டைப் பிரித்தார்களாம். இன்று நிர்வாக வசதிக்காக அம்முறையை மாற்றியமைக்கப் போகிறார்களாம். இது ஆச்சாரியாரின் பிரசாரத் தந்திரம்! அவர்கள் அகராதிப்படி 'திறமை' என்று வைத்துக்கொண்டாலும் சரி, நிர்வாக வசதிக்கு மொழிவழி மாகாணப் பிரிவினை மாத்திரம் போதாது என்பது ஆச்சாரியார் தீர்ப்பு.

இதே விஷயத்தைத்தான் திராவிடர் இயக்கமும் இடைவிடாது இயம்பிவருகிறது. இந்திய உபகண்டத்தின் நிர்வாகம் செம்மையுறவேண்டுமானால், திராவிட நாட்டுப் பிரிவினை இன்றியமையாததாகும் என்பதை ஏனோ மறைக்க முயல்கின்றனர் ஆச்சாரியாரும் அவர்போன்றோரும்? திராவிடம் பிரிந்தால் இந்திய உபகண்டம் மூழுகியாப்போய் விடும்?

நாடு பிரிந்தால் நிர்வாகம் - உறவு முறை ஆகிய அனைத்தும் செம்மையுறத்தக்க ஆட்சி முறையன்றோ அமையும்? அத்தகையநல்லா சிமுறையொன்றைக் கண்டு ஆட்சியாளர் ஏன் இங்ஙனம் மிரள்கின்றனர்? ஆச்சாரியார் கூற்றுப்படி உண்மையிலேயே நிர்வாகம் சீர்பெறவேண்டும், என்ற எண்ணமிருக்குமானால் திராவிடத் தலைவர்களை அழைத்து கலந்தாலோசித்தே நட்புமுறையில் இதனைச் செய்யலாமே.

எனவே, 'பிரிவினை' என்ற சொல்லைக் கேட்டு மிரளுவதை விடுத்து, இந்திய உபகண்டத்தின், உண்மை நிலை அறிந்து உருப்படியான பணியாற்ற ஆட்சியாளர் முன்வரவேண்டும். ஆட்சியாளர் விரும்பினாலும். விரும்பாவிட்டாலும் திராவிடம் எப்படியும் பிரிந்தே தீரும் என்பது உறுதி. நாம் செல்லும் இதே பாதையை ரோசித்தான ஆச்சாரியாரும் செல்கிறார் ஆனால்பாதிவழியில் நிற்கிறார்; இவர்கள் சொல்வதை நாம் கேட்டதா என்ற இறுமாப்புக்கும், உண்மையை மறைக்க முடியவில்லையே யென்ற ஏக்கத்துக்குமிடையே நின்று தவிக்கிறார். திராவிட முன்னேற்றப் பணி ஆச்சாரியார் போன்றோரின இறுமாப்பைத்துடைத்து, அறிவுக்கண்களைத் திறக்கும் என நம்புகிறோம்.

## உக்ரைனில் கொந்தளிப்பாம்

லண்டன், டிச. 2—

சோவியத் ரஷ்யாவிலுள்ள உக்ரைனில் தேசியவாதிகள் கலகம் விளைவித்துவருகிறார்கள், கொரில்லா, நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக கிழக்கு ஐரோப்பாவிலுள்ள இரகசிய வட்டாரங்கள் மூலம் பிரிட்டனுக்குத் தெரியவருகிறது என்ற செய்தியை 'ஸ்காட்ஸ்மன்' வெளியிட்டிருக்கிறது.

உத்தியோகப் பூர்வமான ரஷ்யச் செய்திகளே கொந்தளிப்பு இருக்கிறதென்பதை ஓரளவுக்கு ஒப்புக்கொண்டிருக்கின்றன. அச்செய்திகள் இதற்குக் காரணம் "அமெரிக்க ஏகாதிபத்ய" தூண்டுதலே என்று கூறுகின்றன.

உக்ரைனின் மந்திரிசபை ஸாவ்சென்கோ நவம்பர் மாத ஆரம்பத்தில் 'டிஸ்மிஸ்' செய்யப்பட்ட காரணம் இந்த கொந்தளிப்புகளைத் திறமையுடன் அடக்க முடியாததே என்றும் கருதப்படுகிறது.

## அமெரிக்கர்களுக்கு அரிசிமீது மோகம்!

நியூயார்க், டிச. ?—

அமெரிக்கர்களுக்கு அரிசிமீது அபார மோகம் ஏற்பட்டிருக்கிறது என்று சமீபத்தில் எடுக்கப்பட்ட சர்வேயிலிருந்து தெரியவருகிறது.

அமெரிக்காவில் இப்பொழுது அரிசி உற்பத்தி வெகுவாக அதிகரித்திருப்பதும், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியும் குறைய ஆரம்பித்திருக்கிறது.

யுனைடெட் ஸ்டேட்ஸில் அநேகமாக எல்லாக் குடும்பங்களிலும் அரிசி முக்கிய உணவாக உபயோகிக்கப்பட்டு வருகிறது.

100-குடும்பத்தில் 80 குடும்பத்தினர் அரிசியை தவறாது உபயோகிக்கின்றனர். 100-ல் 3 குடும்பத்தினர்தான் அரிசியை உபயோகிப்பதே இல்லை என்று கூறினார்களாம். பெரிய குடும்பங்கள் அரிசியை அதிகமாக உபயோகிக்கின்றனவென்றும், குறைந்தவருமானம் உள்ளவர்கள் எப்போதாவது உபயோகிக்கின்றனர் என்றும் தெரியவருகிறது. — ருனோ.

## திராவிட முன்னேற்றக் கழகம்

### வில்லிவாக்கம்—நகரஉட்கிளை

வில்லிவாக்கம், டிச. 1—

இவ்வூர் தி. மு. க. அமைப்புக்கூட்டம் ஒற்றவாடைத்தெரு 12-வது எண்ணுள்ள இல்லத்தில் தோழர் கே. கோவிந்தசாமி, அவர்கள் தலைமையில் 30—11—49 அன்று நடைபெற்றது. தோழர்கள் கோவிந்தசாமி, துரைசாமி, இறைமுடிமணி, முதலியோர் தி. மு. க. அவசியத்தை விளக்கினார்கள். பின்பு "திராவிட முன்னேற்றக் கழகம்-வில்லிவாக்கம் நகர உட்கிளை" திறவப்பட்டுக் கீழ்க்கண்ட செயற்குழு உறுப்பினர்கள் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செயலாளர்:—பி. துரைசாமி,.

துணைச்செயலாளர்:—கோ. இறைமுடிமணி.

பொருள் உறுப்பினர்:—கு. வடிவேலு.

விளம்பர உறுப்பினர்:—திரு. பா. மதிவாணன்.

ஏனைய செயற்குழு உறுப்பினர்கள்:—ஆர். கணேசன், டி. எம். பார்த்தசாரதி, கோ. அருளாளன், மு. தியாகராசன், ப. க. விசாகன், ப. கிருஷ்ணசாமி, மு. பார்த்தசாரதி, டி. எ. ராமலிங்கம், கி. கோ. சுப்பிரமணி மேலும் சில செயற்குழுவினரைச் சேர்த்துக்கொள்வதென தீர்மானிக்கப்பட்டது.

கீழ்க்கண்ட தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டு, ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

1. தோழர் கோ. அருளாளன், டி. எம். பார்த்தசாரதி ஆகிய இருவரை, சென்னை மாவட்ட உறுப்பினர்களாக ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

2. பொதுச்செயலாளர் தோழர் சி. என். அண்ணாதுரை அவர்களைக் கொண்டு கழகத்துவக்க விழாவை ஜனவரி முதல்வாரத்தில் நடத்துவதென தீர்மானிக்கப்பட்டது. இரவு 9-மணிக்கு கூட்டம் இனிது முடிந்தது. (வி-உ)

## யந்திரக் கருவிகள் உற்பத்திச் சாலை

### ஸ்விஸ் கம்பெனியுடன் ஒப்பந்தம்

யந்திரக் கருவிகள் தயாரிக்கும் யந்திரமொன்றை இந்தியாவில் திறவ, இந்திய சர்க்கார் ஸ்விஸ் கம்பெனி யொன்றுடன் ஒப்பந்தம் செய்துகொண்டிருப்பதாயும்; இதற்கான மொத்த மூலதனம் ரூ. 16 கோடியாகுமென்றும், அதில் 10 சதவிகிதத்தை மேற்படி ஸ்விஸ் கம்பெனியே போட்டுக்கொள்ளுமென்றும் தொழில் மந்திரி டாக்டர் சியாம் பிரசாத் முகர்ஜி மத்திய சட்டசபையில் 1-ந் தேதி குறிப்பிட்டார்.

இத் தொழிற்சாலை மைசூரில் 1950-ல் துவக்கப் பெறுமென மந்திரி மேலும் தெரிவித்தார்.

## விமானம் நொறுங்கினும் ஆபத்தில்லை

நியூயார்க், டிச. 2—

விமானங்கள் விபத்திற்குள்ளாகி பற்றி எரியும்போது அதிலுள்ளவர்கள் தீயினால் வெந்து சாகாமலிருக்க விசேஷ உடையொன்றை அமெரிக்கர்கள் கண்டுபிடித்திருக்கின்றனர். இந்த 2000 டிகிரிபாரன் ஹீட் வெப்பத்தைத் தாங்க சக்தியுள்ளதாம். அரை அங்குல கனமுள்ளதாம்.

மிகவும் குளிர்ப் பிரதேசங்களான துருவப் பகுதிகளில் விமானத்திலிருந்து விழுந்து டைபவர்களை குளிர் ஒன்றும் செய்யாமலிருக்க ஒரு விசேஷ உடையும் அமெரிக்காவில் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

## கேலிக்கூத்து!

"இந்தியாவில் கோடிக்கணக்கான மக்கள் பசியால் மாண்டு மண்ணோடு மண்ணாகிறார்கள். இச்சமயம் உண்மை என்றும் கடவுள் என்றும் பேசுவது வெறும் கேலிக்கூத்தாகும். கோடிக்கணக்கான மக்கள் வாழ்வு வகையில்லாது இருக்கையில் வாழ்க்கையில் சேர்த்தியான விஷயங்களைப் பற்றி பேசுவதில் பொருளில்லை"

பண்டித நேரு.
3—1—47

## மறுமலர்ச்சிக் கழகப் பொதுக்கூட்டம்

கடம்பத்தூர், நவ. 20—

13—11—49 ஞாயிறு மாலை கடம்பத்தூர் மறுமலர்ச்சிக் கழகப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. திருவள்ளூர், திருப்பாச்சூர், பிஞ்சிவாக்கம், சத்தரை, பேரம்பாக்கம் இன்னும் பல கிராமங்களிலிருந்து கழகத் தோழர்களும், ஆதரவாளர்களும் வந்திருந்தனர். மக்கள் வணிகர் வீதியிலும் கடை வீதியிலும் அமர்ந்து சொற்பொழிவைக் கேட்டனர். இவ்வூரில் இதுவே முதற் கூட்டமாயினும், பெருவாரியான மக்கள் திரண்டிருந்தனர். விழா மாலை 5 மணிக்குத் துவங்கியது. தோழர்கள் புகழரசன், தினதயாளன், கணேசன், ராமச்சந்திரன் முதலியோர்களால் இயக்கப்பாடல்கள் பாடப்பட்டன.

கழகச் செயலாளர் தோழர் க. பொ. மணியப்பன் அவர்கள் எல்லோரையும் வரவேற்று, சொற்பொழிவாற்றிபின் தோழர் கோ. த. கன்னியப்பன் அவர்கள் தலைமையில் கூட்டம் துவக்கப்பட்டது. அதுபோது, தோழர்கள் என். சி. தேவராசன், சிதம்பரம், செல்வமணி ஆகியோர் சொற்பொழிவாற்றியபின் கே. பி. மதியழகன் அவர்கள் மறுமலர்ச்சி என்னும் பொருள் பற்றி விளக்கமாக அரியதொரு சொற்பொழிவு ஆற்றினர். பின்னர், தோழர் என். வி. நடராசன் அவர்கள் பேசுகையில், ஆரிய சனாதனத்தில் சிக்கி மக்கள் அறிவு பாழ்பட்டிருக்கும் நிலைமையும், தற்கால அரசியல் நிலையையும் விளக்கி சுமார் 1-30 மணி நேரம் பேசி முடித்த பின்னர், கூட்டத்தில் கேட்ட கேள்விகளுக்கும் பொருத்தமான பதில் கொடுத்தார். பிறகு செயலாளர் நன்றிகூறக் கூட்டம் இனிது முடிவுற்றது.

## 'காபி' ஈட்டும் டாலர்!

லண்டன், டிச. 4—

இந்தியா ஏற்றுமதி செய்யும் சாமான்கள் டாலர் சம்பாதிக்கப் பெரிதும் உதவியாக இருந்து வருகின்றன வென்று இங்கு கூறப்படுகிறது.

இந்தியப் பொருள்களில் முக்கியமாக காபியைத்தான் குறிப்பிட வேண்டுமாம். காபி இந்தியாவில் நிறைய விளைகிறதென்றும், போருக்கு முன்பிருந்த ஏற்றுமதி நிலைமையை சீக்கிரமே அது அடைந்து விடும் என்று 'பைனான்ஷியல்டைம்ஸ்' கூறுகிறது.

தேயிலை, கம்பளம் இவைகளிலும் இந்திய ஏற்றுமதி திருப்திகரமாகவே இருந்து வருகிறதென்றும், இந்திய மாங்கனிஸுக்கு யு. எஸ்ஸில் தேவை அதிகரித்திருக்கிறதென்றும்வார்னிஷ் செய்யும் மூலப் பொருளான பெழுகும் அமெரிக்காவுக்கு இந்தியாவால் அதிகம் ஏற்றுமதி செய்யப்பட்டுவருகின்றனவென்று அப்பத்திரிகை கூறுகிறது.

## வானொலி

(6-12-49 செவ்வாய்க்கிழமை)
சென்னை
[211·3 மீட்டர்கள்]

காலை:
7-15 தமிழில் செய்திகள்
7-30 கே. பழனிசாமி ஓதுவார்-பாட்டு
8-00 ஆங்கிலத்தில் செய்திகள்
8 15 சினிமாப் பாட்டுகள் (இ. ஏ.)
8 30 என். புவனேஸ்வரி-பாட்டு

பிற்பகல்:
12-30 நகத்தாப்பள்ளிகளுக்கு
1 40 சினிமா பாட்டுகள் (இ. த.)
2-00 தமிழில் செய்திகள்
2 15 உயர்நிலைப் பள்ளிகளுக்கு
2-45 குரல் வளை (இ. த.)

மாலை:
4-00 ஆரம்பப்பள்ளிகளுக்கு
5-30 எம் எஸ். சுப்ரமணியம்-வயலின்
6-00 ஆங்கிலத்தில் செய்திகள்
6-20 எஸ். எஸ். மணி பாகவதர்—பாட்டு

இரவு:
7-15 தமிழில் செய்திகள்
7-45 திருச்சியிலுள்ளபடி
8-45 சென்னை கவர்னர் (ஆங்கிலப் பேச்சு)
9-00 ஆங்கிலத்தில் செய்திகள்
9-45 கபிலர் கேட்ட கொடை (நாடகம்
10 30 வாத்திய இசை
10-30 முடிவு.

திருச்சி
[395·8 மீட்டர்கள்]

காலை:
7-15 தமிழில் செய்திகள்
7-30 எம். சுப்பையா முதலியார்-பாட்டு
8-00 ஆங்கிலத்தில் செய்திகள்
8-15 ராதா, ஜெயலட்சுமி இ. த.)
8-30 டி. எஸ். சுப்புலட்சுமி—புல்லாங்குழல்

பிற்பகல்:
12-30 சுதேசப்பள்ளிகளுக்கு
1 00 சதபம (இ. த.)
1-30 ஆங்கிலத்தில் செய்திகள்
1-40 எம். பி. சீனிவாசன்—பாட்டு
2-00 தமிழில் செய்திகள்
2-15 உயர்நிலைப் பள்ளிகளுக்கு ஔவை துரைசாமி-பேச்சு

மாலை:
4-00 ஆரம்பப்பள்ளிகளுக்கு
5-00 டி. எஸ். சுப்புலட்சுமி—புல்லாங்குழல்
5-40 இசைப் பயிற்சி
6-00 ஆங்கிலத்தில் செய்திகள்
6-15 நாதஸ்வரத்தியக் கச்சேரி
6-30 கிராம நிகழ்ச்சிகள்

இரவு:
7-15 தமிழில் செய்திகள்
7-30 ஏ. சி. செட்டியார் - பேச்சு
7-45 பாக்கரு ராமபாகவதர்-பாட்டு
9-00 ஆங்கிலத்தில் செய்திகள்
9-58 நேயர்கள் கேட்டவை
10-00 முடிவு.

## தனிப்பட்ட ஆராய்ச்சி நிலையங்களுக்கு உரேனியம்

வாஷிங்டன் டிச. 2—

தனிப்பட்ட ஆராய்ச்சி நிலையங்களின் உபயோகத்திற்காகவென்று 200 பவுண்டு உரேனியத்தை ஒதுக்கிவைக்க அணு சக்தி கமிஷன் இசைந்திருக்கிறது.

Printed & Published by T. M Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street, Madras-1.